பக்கங்கள்:-22

காலை முரசு

## கொங்கிரீட் வளையம் சரிந்து விழுந்ததில் மாணவன் சாவு!

**முழுமையான விசாரணைக்குப் பணிப்பு**

கொங்கிறீட் வளையத்தில் சிக்சி பாட சாலை மாணவன் ஒருவர் உயிரிழந்துள்ள சம்பவம் தொடர்பில் 06▶



| முழக்கம்: 01 | வள்ளுவர் ஆண்டு 2055 | பங்குனி 23 | சனிக்கிழமை | 06.04.2024 | அதிர்வு 249 |




# பொன்னாவெளியில் டக்ளஸை ஓட ஓட விரட்டியடித்தனர் மக்கள்

## வாய்த்தர்க்கம் கைகலப்பாக மாறியது அமைச்சரின் ஆதரவாளர்களும் ஓட்டம்





(து.சுபேசன், ந.லோகதயாளன்)

கிளிநொச்சி, ஜெயபுரம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பொன்னாவெளிப் பகுதியில் அமைக்கப்படவுள்ள டோக்கியோ சீமெந்து தொழிற்சாலையின் வளாகத்துக்கு நேற்று மதியம் ஆதரவாளர்கள் படை சூழ வந்த கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவை அந்த வளாகத்துக்குள் நுழைய விடாது கிராம மக்கள் ஓட ஓட விரட்டியடித்தனர். 07▶

## இந்தியத் துணைத் தூதுவருடன் தமிழரசு எம்.பி. சிறிதரன் பேச்சு



இலங்கைக்கான யாழ். இந்தியத் துணைத் தூதரகத்தின் புதிய தூதுவராகப் பொறுப்பேற்றுள்ள ஸ்ரீ சாய்முரளியை, இலங்கைத் தமிழரசுக் கட்சியின் யாழ்ப்பாணம் – கிளிநொச்சி மாவட்ட நாடாளுமன்ற 06▶




"எது நடந்ததோ அது நன்றாகவே நடந்தது."

– கீதாசாரத்தின் ஒரு பகுதி வாசகம் இது.

தமிழரசுக் கட்சியின் வழக்குத் தொடர்பில் நேற்றைய தவணை அமர்வு பற்றிய என் கணிப்பு இந்த கீதாசார வரியின் வழியில்தான் உள்ளது.

கட்சிக்கும் அதன் வரலாற்றில் கெட்ட பெயர் வராமல், நடந்து முடிந்த கட்சியின் தேசிய மாநாட்டை ஒட்டிய பொதுக் குழு முடிவுகளுக்கும் பங்கம் வராமல், அவற்றை தொடர்வதற்கான வாய்ப்புக் கிட்ட வேண்டுமென்றால் நேற்றைய வழக்கின் அணுகுமுறைதான் சாதகமான – சாத்தியமான – சாமர்த்தியமான – மார்க்கம் என்பது என் கணிப்பீடு.

வழக்கை இப்படிச் சுமுகமான 06▶

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம் - Bonding Tamils Globally



# டலஸின் சகாக்கள் சஜித் கூட்டணியில் தஞ்சம்

## புரிந்துணர்வு உடன்படிக்கையில் கைச்சாத்து

“நாட்டு மக்களின் பொருளாதார, சமூக, அரசியல் நலன்களைப் பாதுகாப்பதற்கு அனைத்து சலுகைகளையும் ஒதுக்கிவிட்டு, நாட்டின் தற்காலிகக் காவலர்களாக ஐக்கிய மக்கள் சக்தி அரசு அதிகபட்ச தியாகங்களைச் செய்யும்.” – என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

ஐக்கிய மக்கள் கூட்டணி மற்றும் சுதந்திர மக்கள் காங்கிரஸ் உறுப்பினர்களிடையே கூட்டணி அமைப்பதற்கான புரிந்துணர்வு உடன்படிக்கை கைச்சாத்திடும் நிகழ்வு நேற்று பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே எதிர்க்கட்சித் தலைவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில்,

“இந்தக் கூட்டணிகளுக்குப் பின்னால் எந்த வரப்பிரசாதங்களும் சலுகைகளும் இல்லை. இன்னும் பல கட்ட மக்கள் மைய கூட்டணிகள் எதிர்காலத்தில் உருவாகும்.

சலுகைகள், பதவிகளுக்கு அல்ல நாட்டின் நலன்களுக்கு முன்னுரிமை அளிக்கப்பட வேண்டும். அதனை நாம் செய்வோம். சுயநலமின்றி பொது மக்களுக்கு சேவையாற்றும் உன்னத பொது சேவைக்காக அணி திரள்வோம் என அழைப்பு விடுக்கின்றோம்.

இனம், மதம், சாதி, குலம், கட்சி பேதமின்றி நாட்டை முன்னோக்கி கட்டியெழுப்பும் பயணத்தில் 220 இலட்சம் மக்களுக்கும் தலைமைத்துவம் வழங்க நான் தயார்.” – என்றார்.

சுதந்திர மக்கள் காங்கிரஸ் உறுப்பினர்களான பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ், டிலான் பெரேரா, கலாநிதி நாலக கொடஹேவா, வசந்த யாப்பா பண்டார, கே.பி.எஸ். குமாரசிறி மற்றும் வைத்தியர் உபுல் கலப்பத்தி உள்ளிட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் புரிந்துணர்வு உடன்படிக்கையில் கைச்சாத்திட்டனர்.




















# 1,909.7 மில்லியன் அமெரிக்க டொலர்களை அரசாங்கம் வெளிநாட்டுக் கடன் மற்றும் வட்டியாக செலுத்தியுள்ளது

## ஜனாதிபதி அலுவலகத்தின் பணிப்பாளர் நாயகம் தெரிவிப்பு




"ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பதவியேற்றதிலிருந்து 2024 பெப்ரவரி வரையான காலப்பகுதியில் இலங்கை அரசாங்கம் 1909.7 மில்லியன் அமெரிக்க டொலர் வெளிநாட்டுக் கடன் மற்றும் வட்டியை செலுத்தியுள்ளது."

– இவ்வாறு ஜனாதிபதி அலுவலகத்தின் பணிப்பாளர் நாயகம் ரஜித் கீர்த்தி தென்னகோன் தெரிவித்தார். நேற்றுத் தாம் வெளியிட்ட விசேட ஊடக அறிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

அந்த அறிக்கையில் அவர் மேலும் குறிப்பிடுகையில் – "ஆசிய அபிவிருத்தி வங்கிக்கு 760.1 மில்லியன் அமெரிக்க டொலர்களும் ஆசிய உள்கட்டமைப்பு முதலீட்டு வங்கிக்கு 7.0 மில்லியன் அமெரிக்க டொலர்களும் மேற்கூறியவாறு செலுத்தப்பட்டுள்து.

மேலும், ஐரோப்பிய முதலீட்டு வங்கிக்கு 22.3 மில்லியன் அமெரிக்க டொலர்களும், விவசாய அபிவிருத்திக்கான சர்வதேச நிதியத்திற்கு 17.9 மில்லியன் அமெரிக்க டொலர்களும், சர்வதேச நாணய நிதியத்தின் நுகுகு 23-26 திட்டத்திற்கு 9.8 மில்லியன் அமெரிக்க டொலர்களும் செலுத்தப்பட்டுள்ளன.

அதேபோல், நோர்டிக் அபிவிருத்தி நிதியத்திற்கு 1.7 மில்லியன் அமெரிக்க டொலர்களும், சர்வதேச அபிவிருத்திக்கான ஓபெக் நிதியத்திற்கு 29.9 மில்லியன் அமெரிக்க டொலர்களும், உலக வங்கிக்கு 489.9 மில்லியன் அமெரிக்க டொலர்களும் செலுத்தப்பட்டுள்ளன. இதன்படி அரசாங்கம் 1,338.8 மில்லியன் அமெரிக்க டொலர்களை கடன் மற்றும் வட்டியாக செலுத்தியுள்ளது.

அரசாங்கத்தின் கடன் கொடுப்பனவு பதிவைக் கருத்தில் கொண்டு, ஆசிய அபிவிருத்தி வங்கி, சர்வதேச நாணய நிதியம், உலக வங்கி என்பன கடன் மற்றும் ஏனைய சலுகைகளை வழங்கியுள்ளன.

இந்தக் காலகட்டத்தில், இருதரப்பு கடன்கள் மற்றும் வட்டியாக 571.0 மில்லியன் டொலர்கள் செலுத்தப்பட்டுள்ளன. மேலும், கடன்கள் மற்றும் வட்டி செலுத்துதல் தொடர்பான இணக்கப்பாடுகளை எட்ட உரிய நாடுகள் மற்றும் நிறுவனங்களுடனும் பேச்சுக்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

பெரிஸ் சமவாய நாடுகளுடன் கடன் மற்றும் வட்டி செலுத்துதல் தொடர்பான ஆரம்பகட்ட இணக்கப்பாடுகள் எட்டப்பட்டிருப்பதோடு, 2024 பெப்ரவரி இறுதிக்குள் செலுத்த வேண்டிய நிலுவைத் தொகை 450.7 மில்லியன் டொலர்களாகக் காணப்பட்டது.

கடந்த காலத்தில் இடை நிறுத்தப்பட்ட பல திட்டங்களை மீள ஆரம்பிப்பதற்காக, ஜப்பான் உள்ளிட்ட பல நாடுகளுடன் ஆரம்பகட்ட இணக்கப்பாடு எட்டப்பட்டுள்ளது. கனடா, சீனா, பிரான்ஸ், ஜெர்மனி, இந்தியா, ஜப்பான், தென் கொரியா, குவைட், பாகிஸ்தான், ரஷ்யா, ஸ்பெயின், அமெரிக்கா, சீனா அபிவிருத்தி வங்கி, சீன – ஹங்கேரி, இந்திய மற்றும் அமெரிக்க எக்சிம் வங்கி உட்பட கிட்டத்தட்ட 25 நிதி நிறுவனங்களுடன், இலங்கை இருதரப்பு கடன் கொடுக்கல் வாங்கல்களை செய்துள்ளது.

இலங்கை மத்திய வங்கி தனது டொலர் கையிருப்பை வெளிநாட்டு நாணயங்களில் அதிகரித்துக் கொண்டு உள்நாட்டின் மக்கள் வங்கி, இலங்கை வங்கி, ஹட்டன் நஷனல் வங்கி ஆகியவைக்கு செலுத்த வேண்டியிருந்த கடன்களை செலுத்தி முடித்த பின்பே இந்தக் கடன்கள் மற்றும் வட்டிக் கொடுப்பனவுகள் செலுத்தி முடிக்கப்பட்டிருப்பதோடு, அதற்கான கொடுக்கல் வாங்கல் அமெரிக்க டொலர்கள், யூரோக்கள், ஜப்பானிய யென்கள், கனேடிய டொலர்கள் ஆகிய நாணய அலகுகளில் செய்யப்பட்டுள்ளன.

மேலும், இந்தப் பலதரப்பு, இருதரப்பு மற்றும் உள்நாட்டுக் டொலர் கடன்களை செலுத்திய பின்னர், நாட்டின் கையிருப்பு 4.9 பில்லியன் டொலர்களாக (4950 மில்லியன் டொலர்கள்) ஆக அதிகரித்துள்ளது. அதிக வட்டி விகிதத்தில் அரசாங்கம் பெற்றுள்ள 4,439.2 மில்லியன் டொலர் வணிகக் கடன்கள் மற்றும் வட்டியை மறுசீரமைக்கும் முயற்சிகளை அரசாங்கம் ஆரம்பித்திருப்பதுடன், மேலும் கடன் மறுசீரமைப்பு பேச்சுவார்த்தைகள் முடியும் வரை பணம் செலுத்தப்படாது.

2015 ஆம் ஆண்டு வரவு – செலவு திட்ட முன்மொழிவாக ஆரம்பிக்கப்பட்ட சிரேஷ்ட பிரஜைகளின் நிலையான வைப்புத் தொகைக்கான சிறப்பு வட்டி விகிதத்தின் கீழ், அதாவது வருடத்திற்கு 15 வீத வட்டி விகிதம் வழங்கப்பட்டது. அப்போது வங்கிகளில் நிலவிய குறைந்த வட்டி விகிதத்தில் இருந்து 15 வீத அதிக வட்டி விகிதத்தைக் குறைக்க பணம் வழங்கியது திறைசேரி.

2015ஆம் ஆண்டு வர்த்தக வங்கிகள் மூலம் இத்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டபோது, இந்த வட்டி விகிதம் 10 லட்சம் ரூபா வரை வழங்கப்பட்டு, 2018ஆம் ஆண்டு வரவு – செலவுத்திட்டத்தில் 15 லட்சம் ரூபாவாக உயர்த்தப்பட்டது. அதன்படி, 12 லட்சம் சிரேஷ் பிரஜைகள் கணக்குகளுக்கும் இந்த வட்டி விகிதம் கிடைத்தது.

2022 ஆம் ஆண்டளவில், இந்த கூடுதல் வட்டியை செலுத்துவதற்காக திறைசேரி ஒரு காலாண்டிற்கு 20 பில்லியன் ரூபாவை வழங்கியுள்ளது. இதன்படி, திறைசேரி வருடத்திற்கு 80,000 மில்லியன் ரூபாவை இதற்காக செலுத்த வேண்டியிருந்தது. ஆனால் நாடு எதிர்கொள்ளும் பொருளாதார நெருக்கடி காரணமாக, இந்த செயல்முறை 2022 ஒக்டோபர் 01 முதல் நிறுத்தப்பட்டது."– குறிப்பிடப்பட்டுள்ளது.

# சு.கவின் தலைமையகத்திலிருந்து மிக முக்கிய ஆவணங்கள் மாயம்?




ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் கொழும்பு டார்லி வீதித் தலைமையகத்தில் இருந்த மிக முக்கிய ஆவணங்கள் காணாமல் போயுள்ளன எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், இந்த விடயம் தொடர்பில் மருதானை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்குள் பல்வேறு குளறுபடிகள் ஏற்பட்டுள்ள பின்னணியில் முக்கிய ஆவணங்கள் காணாமல் போயுள்ளன எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைவராக செயற்படுவதற்கு கொழும்பு மேல் நீதிமன்றம் இடைக்காலத் தடையுத்தரவு பிறப்பித்துள்ள நிலையிலேயே ஆவணங்கள் காணாமல் போயுள்ளன எனத் தகவல் வெளியாகியுள்ளது.

இதனிடையே, கடந்த 30 ஆம் திகதி கூடிய ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் செயற்குழு, துமிந்த திசாநாயக்க, லசந்த அழகியவண்ண மற்றும் மஹிந்த அமரவீர ஆகியோர் வகித்த பதவிகளில் இருந்து நீக்கப்பட்டனர்.

அத்துடன் அந்தப் பதவிகளுக்கு வேறு நபர்கள் நியமிக்கப்பட்டனர்.

இதேவேளை, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் அரசியல் குழுவை அவசரமாக கூட்டுமாறு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் சிரேஷ்ட உப தலைவர் நிமல் சிறிபால டி சில்வா கோரிக்கை விடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.



# நவீன தொழில்நுட்பமும் அறிவும் கல்வியின் புதிய ஆயுதங்களாகும்

## ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவிப்பு

“அறிவைப் புதுப்பித்தல் என்பது கல்வியின் பாரிய பணியாக மாறியுள்ளதாகவும், அடுத்த 75 வருடங்களில் நாடு முன்னோக்கிச் செல்ல வேண்டுமாயின் கல்வி முறைமையில் புதிய மாற்றம் ஏற்பட வேண்டும்.”

– இவ்வாறு ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தெரிவித்துள்ளார்.

நேற்றுப் பிற்பகல் இடம்பெற்ற கொழும்பு சிறிமாவோ பண்டாரநாயக்க கல்லூரியின் 2022 வருடாந்த பரிசளிப்பு விழாவில் கலந்து கொண்டபோதே ஜனாதிபதி மேற்கண்டவாறு குறிப்பிட்டார். இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில்,

“நான் அப்போதைய கல்வி அமைச்சராக இருந்த காலத்தில் இப்பாடசாலையை அபிவிருத்தி செய்வதற்கான வாய்ப்பு எனக்குக் கிடைத்ததையிட்டு நான் மகிழ்ச்சியடைகிறேன். அதன் முடிவுகளை இன்று காணலாம். எனது வாழ்க்கையின் மிகவும் கடினமான காலப்பகுதியில் நான் இந்த சிறிமாவோ பண்டாரநாயக்க கல்லூரிக்கு அருகிலேயே வசித்தேன்.

கடந்த இரண்டு வருடங்களில் இந்த நாட்டை மீண்டும் வீழ்ச்சியடைய விடாமல் திட்டமிட்டு நாட்டை கட்டியெழுப்ப முடிந்தது. இது போதுமானது அல்ல. இன்னும் 05 முதல் 10 ஆண்டுகள் இந்தப் பயணத்தைத் தொடர வேண்டும்.

நாட்டின் பிள்ளைகளின் எதிர்காலம் குறித்தும் சிந்திக்க வேண்டும். நீங்கள் அனைவரும் எதிர்காலத்தில் வேகமாக வளரும் சமுதாயத்தில் இணைவீர்கள். அதற்கு உங்களை தயார்படுத்துவது அரசாங்கத்தின் பொறுப்பாகும்.

இன்றைய பிள்ளைகள் கையடக்கத் தொலைபேசி மற்றும் மடிக்கணினிகள் மூலம் நவீன உலகத்துடன்

05

















# நவீன தொழில்நுட்பமும் அறிவும் கல்வியின் புதிய ஆயுதங்களாகும்

## ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவிப்பு

(4ஆம் பக்கத் தொடர்ச்சி...)

இணையும் வாய்ப்பு கிடைத்துள்ளது. இது கல்வியின் புதிய ஆயுதம்.

நாம் ஒரு நாடாக அபிவிருத்தியடைய வேண்டும். அடுத்த 10-15 ஆண்டுகளில் வலுவான பொருளாதாரம் உருவாக்கப்பட வேண்டும். உலகத்துடன் இணைந்து நாம் இந்தப் பயணத்தில் செல்ல வேண்டும். அதற்கு அனைத்து துறைகளிலும் நவீனமயமாக்கல் அவசியம்.

அதற்கு அறிவும் தொழில்நுட்பமும் தேவை. ஞஅயசவ யுபசஉைரடவரசந என்பது ஒரு வார்த்தை அல்ல. அதற்குத் தேவையான அறிவைப் பெற வேண்டும். மேலும், பிளாக் செயின் தொழில்நுட்பம் ஒரே தடவையில் கிடைக்காது. அதற்கும் அறிவு வேண்டும்.

இன்று உலகில் அரசாங்கங்களுக்கும் ஒன்லைன் நிறுவனங்களுக்கும் இடையே பெரும் இழுபறி நிலவி வருகிறது. இன்று, ஒவ்வொரு நாடும் தனது அதிகார எல்லைக்குள் அனைத்தையும் கட்டுப்படுத்தும் பழக்கத்தில் உள்ளது.

ஆனால் இப்போது ஒன்லைன் செயற்பாடுகளால் எதையும் கட்டுப்படுத்த முடியாது. ஆபாச செயலிகளைக் கட்டுப்படுத்த முடியாததால், அதற்கான சட்டங்களைக் கொண்டு வரவேண்டியுள்ளது.

வேகமாக மாறிவரும் இந்த உலகில் அறிவை வளர்ப்பது மிகவும் அவசியம். உங்கள் அறிவைப் புதுப்பிக்காமல் உலகத்துடன் முன்னேற முடியாது. எனவே, அறிவைப் புதுப்பித்தல் கல்வியின் முக்கியப் பணியாகிறது. இந்த நோக்கத்திற்காக, அரசாங்கம் இந்த நாட்டில் பாடசாலைக் கட்டமைப்பில் மாற்றத்தை ஏற்படுத்தத் திட்டமிட்டுள்ளது.

அதன்படி ஒவ்வொரு மாகாணத்திலும் கல்விச் சபையை நிறுவுவதற்கான வேலைத்திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது.

மேலும், ஆசிரியர்களுக்கும் பிள்ளைகளுக்கும் ஆங்கில மொழி அறிவு வழங்கப்பட வேண்டும். மேலும், பாடசாலை மாணவர்களுக்கு தகவல் தொழில்நுட்ப அறிவையும், அதற்குத் தேவையான உபகரணங்களையும் வழங்க வேண்டும்.

இன்று உலகம் செயற்கை நுண்ணறிவு அல்லது யுஜ தொழில்நுட்பத்துடன் முன்னேற தயாராக உள்ளது. நாமும் அந்த அறிவைப் பெற வேண்டும். அப்போதுதான் இந்த நவீன தொழில்நுட்பத்துடன் நாம் முன்னேற முடியும். எனவே, பாடசாலைத் பாடத்திட்டத்தில் யுஜ தொழில்நுட்பத்தை சேர்க்க திட்டமிட்டுள்ளோம். இது வெற்றிகரமாக செயல்படுத்தப்படும் போது, யுஜ தொழில்நுட்பத்தில் இந்தியாவை விடவும் முன்னேறும் திறன் நம்மிடம் உள்ளது.

அதற்கான புதிய சட்டங்களைக் கொண்டு வர நடவடிக்கை எடுத்து வருகிறோம்.

பசுமைப் பல்கலைக்கழகத்தை அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமாக மாற்றவும் எதிர்பார்க்கிறோம். அப்போது நாட்டில் இன்னொரு புதிய பல்கலைக்கழகம் உருவாகும். மேலும், எனது உத்தியோகபூர்வ இந்தியப் விஜயத்தின் போது, சென்னை ஐஐடியின் வளாகம் ஒன்றை நம் நாட்டிற்கு வழங்குவதாக பிரதமர் மோடி உறுதியளித்தார்.

மேலும், குருநாகல், சீதாவக்க மற்றும் மற்றுமொரு பிரதேசத்தில் மூன்று தொழிநுட்ப பல்கலைக்கழகங்களை ஸ்தாபிக்க நான் நிதியை ஒதுக்கியுள்ளேன். இந்தப் புதிய தொழில்நுட்ப அறிவை பிள்ளைகளுக்கு வழங்குவதற்காக பல்கலைக்கழகக் கட்டமைப்பு கட்டியமைக்கப்படுகிறது." - என்றார்.









## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

முறையில் முடிப்பது என்றால் இரண்டொரு வழக்குத் தவணை தேவைப்படும் என்பதை நேரத்துடன் இப்பத்தியில் சுட்டிக் காட்டி இருந்தேன்.

சுமந்திரனின் நேற்றைய வாதாட்டத்திலும் ஆட்சேபனை சமர்ப்பணங்களிலும் ஒரு விடயம் என் கருத்தைத் தொட்டது. அதனை வாசகர்களுடன் பகிர்ந்து கொள்வது சரி என்று நினைக்கிறேன்.

"பொதுக்குழுவின் உறுப்பினர்கள் பங்குபற்றி வாக்களித்தமையில் பெரிய தவறேதும் இல்லை. கட்சியின் தலைவராக இருந்த மாவை சேனாதிராஜா கடைசி நேரத்தில் கொண்டு வந்து நுழைத்த – அண்ணளவாக எண்ணிக்கை அளவில் 20 பேர் வரையான – தரப்பினரின் பங்குபற்றல் தவறுக்குரியதுதான். ஆனால் அந்த எண்ணிக்கையிலான தலைமீடு தலைவர் தெரிவில் எந்த மாற்றத்தையும் ஏற்படுத்தியிருக்க முடியாது என்பதால் அதைப் புறக்கணிக்க முடியும்" – என்று சுமந்திரன் வெளிப்படையாக வாதிட்டமை தான் கவனிக்கத்தக்கது.

இப்படி மாவை அழைத்து வந்து வாக்களிக்க நுழைக்கப்பட்டவர் என்று கருதப்படும் ஒருவரை, அவரின் அதிகப்பிரசங்கித்தனத்தையே பயன்படுத்தி, வழக்கில் கமுக்கமாகக் கொண்டு வந்து சொருகிய சுமந்திரனின் பாணியும் எதிர்பாராதது தான்.

தம்மைத் தாமே 'கலாநிதி' என்ற அடைமொழியுடன் பிரபலாபித்துக் கொள்ளும் அகிலன் முத்துக்குமாரசாமிதான் அவர். கனடாவாழ் தமிழர். இங்கு ஒருகாலும், கனடாவில் ஒரு காலும் வைத்திருப்பவர்.

தமிழரசுக் கட்சியின் பத்திரிகை என்று கருதப்படும் 'புதிய சுதந்திரன்' வெளியீட்டுக்காகக் கட்சித் தலைவர் மாவை சேனாதிராஜாவினால் பணிக்கமர்த்தப்பட்டவர், பத்திரிகையைச் சூறையாடித் தம்முடையதாக வெளியிட்டு வருகின்றமையை இப்பத்தியில் ஏற்கனவே சுட்டிக்காட்டி இருந்தேன். அவர் சுமந்திரனோடு சுரண்டி, வசமாக வழக்கில் வந்து மாட்டி இருக்கின்றார் என்பது என் கணிப்பீடு.

அவர் சுமந்திரனைப் பற்றி அந்த இலத்திரனியல் பத்திரிகையில் எழுதியவை நீதிமன்ற அவமதிப்பிற்குரிய குற்றங்களா என்பது எனக்குத் தெரியாது. ஆனால் சுமந்திரனின் நேற்றைய வாதத்தின் பேரில் நீதிமன்ற அவமதிப்புக் குற்றங்களாக அவை கருதப்படலாம் என்று நீதிமன்றம் திருப்திப்பட்டமையினால்தான் நீதிமன்ற அவமதிப்புக் குற்ற விசாரணைக்காக அவருக்கு அழைப்பாணைக் கட்டளை பிறப்பிக்க நீதிமன்றம் உத்தரவிட்டிருக்கின்றது.

"புதிய சுதந்திரன், தமிழரசுக் கட்சியின் பத்திரிகை என்பதை அதன் மீள் பிரசுரத்தை இலத்திரனியல் பத்திரிகையாக இப்போது வெளியிடத் தொடங்கிய போது அதில் அகிலன் முத்துக்குமாரசாமி குறிப்பிட்டுள்ளார். அப்படிக் கட்சியினுடையது என்று கூறப்படும் பத்திரிகையை வெளியிட வேண்டாம் என்று கட்சி உத்தியோகபூர்வமாக எழுத்தில் அறிவித்தும் அதை தம்பாட்டில் வெளியிடுகின்றார் அகிலன். அதுவல்ல இங்கு நான் கூற வருவது" – என்ற பீடிகையுடன்தான் தமது குற்றச்சாட்டை நேற்று சுமந்திரன் நீதிமன்றத்தில் ஆரம்பித்தார்.

நீதிமன்ற அவமதிப்பு குற்றச்சாட்டுக்காக இந்த வழக்கில் அகிலன் விசாரணைக் கூண்டில் ஏறுவாராயின் அவருக்குப் பல சிக்கல்கள் காத்திருக்கின்றன என்பது என் அனுபவக் கணிப்பீடு.

பத்திரிகை யாருடையது, பத்திரிகை மீதான நீதிமன்ற அவமதிப்பு குற்றச்சாட்டின் பகிரப் பொறுப்பு கட்சியின் பத்திரிகையை வெளியிட அனுமதி தந்தவர் என கருதப்படும் கட்சித் தலைவருக்கும் உரியதா என்பவை எல்லாம் கேள்விக்குள்ளாகும்.

அத்துடன் பத்திரிகைப் பிரசுரிப்பாளர் யார், ஆசிரியர் யார், அதில் கருத்து கூறும் அகிலன் முத்துக்குமாரசாமியின் தாரதம்மியம் யாது, சாதாரணதரம் – உயர்தரம் – போன்றவற்றிலாவது சித்தி அடைந்தாரா? அவர் தமக்கு மகுடமாக சூட்டிக் கொள்ளும் 'கலாநிதி' பட்டம் வழங்கிய தரப்பு யாது, 'கலாநிதி' பட்டமளிக்கும் தகுதி அதற்கு உண்டா, அதைப் பெறும் தகுதி அகிலனுக்கு உண்டா – என்பவை போன்ற கேள்விகள் கூட சுமந்திரன் பக்கத்திலிருந்து அகிலன் பக்கம் பாய வாய்ப்புண்டு.

நாளிதழ் வெளியீட்டில் கட்சித் தலைவர் மாவையின் பங்கு, கட்சி நிறுத்தும்படி பணித்த பத்திரிகைக்கு கட்சித் தலைவர் மாவை விசேட பேட்டி வழங்கியமை பற்றியெல்லாம் அவதூறு விவகாரத்தை ஒட்டி பகிரங்கமாகக் கேள்வி – பதில்கள் நீதிமன்றத்தில் கிளம்ப வாய்ப்புண்டு.

மொத்தத்தில் விடயம் படு சுவாரஸியமாக இருக்கும்.

சம்பந்தப்பட்ட அகிலன் கனடாப் பிரஜை என்று சில வட்டாரங்கள் கூறுகின்றன. அது உண்மையாக இருக்கலாம். இலங்கையின் இரண்டாம் பிரஜாவுரிமையை அவர் பெற்றிருக்கக் கூடும்.

ஆனால் இலங்கைத் தமிழரசு கட்சியின் யாப்பு, அதன் உறுப்பினர்கள் 'இலங்கை வாழ் தமிழர்கள்' என்று உறுதியாகப் பேசுகின்றது. இலங்கையில் இரண்டாவது பிரஜா உரிமை பெற்றவரை 'இலங்கை வாழ் தமிழர்' என்ற கோதாவில் தமிழரசு உறுப்பினராகச் சேர்க்க முடியுமா என்ற அமிலச் சோதனை கூட இந்த நீதிமன்ற அவதூறு வழக்கை ஒட்டிக் கட்டவிழ இடம் உண்டு.

இன்னொரு ஊடக முதலாளியும் இரண்டாவது பிரஜாவுரிமையுடன் கட்சியில் இணைய விண்ணப்பம் கொடுத்துள்ள சூழலில், இந்த விவகாரங்கள் எல்லாம் முக்கியத்துவம் பெறும்.

வழக்கில் சுமந்திரன் ஆட்சேபனை தாக்கல் செய்திருப்பதால், தாங்களும் ஆட்சேபனை தாக்கல் செய்ய வேண்டும் என்று ஏனைய எதிராளிகள் நிலைப்பாடு எடுத்துள்ளனர். அதனால் வழக்குத் தவணையிடப்பட்டுள்ளது.

சுமந்திரன் நீதிமன்ற அவதூறின் பெயரில் ஒரு பத்திரிகைப் பிரசுரிப்பாளரை நீதிமன்றுக்கு அழைத்துள்ளார். ஆகவே சுமந்திரன் தரத்தில் தாங்களும் இருக்கின்றனர் என கருதி, அதை நிரூபித்துக் காட்ட தாங்களும் ஒன்றோ, இரண்டு பத்திரிகைகளை இந்த வழக்கில் நீதிமன்றத்திற்கு இழுத்து விட்டு, தங்கள் திறமையைக் காட்ட வேண்டும் என்ற முனைப்பு எதிராளிகளின் சில மட்டங்களில் இருப்பதாக முணுமுணுக்கப்பட்டது.

நல்ல விடயம். இவை எல்லாம் விசாரித்து முடியும் வரை மாவை சேனாதிராஜா தலைவராக நீடிப்பார். அவர் காட்டில் நல்ல மழை, போங்கள்...!

வழக்குக் குறித்து இன்னும் பல விடயங்கள் உண்டு. அடுத்து வரும் நாள்களில் பார்ப்போம்.

## கொங்கிரீட் வளையம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

முழுமையான விசாரணைகளை முன்னெடுக்குமாறு மத்திய மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர் பணிப்புரை விடுத்துள்ளார்.

ஹட்டன் கல்வி வலயத்துக்குட்பட்ட மஸ்கெலியா காட்மோர் தமிழ் வித்தியாலயத்தில் தரம் 6 இல் கல்வி பயிலும் 11 வயது மாணவனே நேற்றுமுன்தினம் பிற்பகல் இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

பாடசாலைக்கு அருகாமையில் கொண்டு வந்து இறக்கப்பட்டிருந்த கொங்கிரீட் சிலின்டர்களில் ஒன்று உருண்டதில் அதில் சிக்குண்டு மாணவன் கடும் காயங்களுக்குள்ளான நிலையில் மஸ்கெலியா வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லும் வழியில் உயிரிழந்துள்ளார்.

இவரது சடலம் மஸ்கெலியா வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பாக முழுமையான விசாரணைகளை மேற்கொள்ளுமாறு மத்திய மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர் ஹட்டன் வலயக் கல்விப் பணிப்பாளருக்கு அறிவித்துள்ளார்.

குறித்த கொங்கிரீட் சிலிண்டர்கள் நேற்றுமுன்தினம் நண்பகல் 12 மணியளவில் தோட்ட நிர்வாகத்தால் பாடசாலைக்குச் சமீபமாக உள்ள கழிவறைக்குப் பக்கத்தில் மைதானத்தில் போடப்பட்டிருந்தன என்றும், இந்நிலையில் பிற்பகல் மலசலடம் சென்ற மாணவன் குறித்த கொங்கிரீட் சிலிண்டர்கள் போடப்பட்டிருந்த பகுதிக்குச் சென்ற போது சிலிண்டர் உருண்டு மாணவனுடன் இழுத்துச் செல்லப்பட்டு பாடசாலை கட்டட சுவர் ஒன்றில் மோதுண்டு இந்த விபத்து நிகழ்ந்துள்ளது என்று பொலிஸார் மேற்கொண்ட ஆரம்பகட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாணைகளை மஸ்கெலியா பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## இந்தியத் துணைத்..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் மரியாதை நிமித்தம் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளார்.

யாழ்ப்பாணத்திலுள்ள இந்தியத் துணைத்தூதரகத்தில் நடைபெற்ற இந்தச் சந்திப்பின்போது, ஈழத்தமிழர்களது அரசியல் நலன்சார் விடயங்கள் மற்றும் சமகால நெருக்கடிகள் உள்ளிட்ட பல நிலைப்பட்ட விடயங்கள் பேசப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# பொன்னாவெளியில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

மக்களின் எதிர்ப்பையும் மீறி அமைச்சரும், 6 பஸ்களில் வந்த ஆதரவாளர்களும் சீமெந்து தொழிற்சாலை அமைக்கப் படவுள்ள வளாகம் மற்றும் சுண்ணக்கல் அகழ்விடத்துக்குள் நுழைய முற்பட்ட வேளையில் இரு தரப்பினருக்கும் இடையே சுமார் ஒரு மணி நேரம் முரண்பாடு ஏற்பட்டு கைகலப்பு மற்றும் தள்ளுமுள்ளும் இடம்பெற்றது.

இருப்பினும் அமைச்சரும், அமைச்சருடைய ஆதரவாளர்களும் நீண்ட நேரம் போராட்டத்தில் ஈடுபட்ட பொன்னாவெளி மக்களுடன் முரண்பாட்டில் ஈடுபட்டிருந்தனர்.

இந்நிலையில் சம்பவ இடத்தில் நின்ற ஜெயபுரம் மற்றும் முழங்காவில் பொலிஸார் அமைச்சருடைய ஆதரவாளர்களை அப்புறப்படுத்த முயற்சித்த போதிலும் அவர்கள் தொடர்ந்தும் மக்களுடைய தடையை உடைத்துக்கொண்டு சீமெந்து தொழிற்சாலை அமைக்கப்படவுள்ள வளாகத்துக்குள் நுழைய முற்பட்டமையால் பொலிஸாருக்கும், அமைச்சருடைய ஆதரவாளர்களுக்கும் இடையே தள்ளுமுள்ளு ஏற்பட்டது.

இறுதியில் சுமார் ஒரு மணிநேரத்தின் பின்னர் அமைச்சரும் அவருடைய ஆதரவாளர்களும் அவ்விடத்தில் இருந்து பின்வாங்கினர்.

பொன்னாவெளி கிராமத்தில் அமையவுள்ள சீமெந்துத் தொழிற்சாலை மற்றும் சுண்ணக்கல் அகழ்வு செயற்பாடுகளைக் கண்டித்து நான்கு கிராம மக்கள் இணைந்து 277ஆவது நாளாகப் போராடி வரும் நிலையில், அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மக்களின் போராட்டத்தை மலினப்படுத்த முற்பட்ட வேளை மக்கள் கொதிப்படைந்ததுடன் அமைச்சரையும், அவரின் ஆதரவாளர்களையும் அங்கிருந்து ஓட ஓட விரட்டியடித்தனர்.



















# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்



259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## மைத்திரியின் பரிதாபம்

'வாள் எடுத்தவன் வாளால் அழிவான்' என்பார்கள். சுதந்திரக் கட்சியின் தலைமைத் துவ மாற்றங்களை அவதானிப்பவர்கள் இந்த முதுமொழியின் நியாயத்தைப் புரிந்து கொள்வர்.

2005 நவம்பர் வரை நாட்டின் ஜனாதிபதி யாகவும் சுதந்திரக் கட்சியின் தலைவராகவும் இருந்தவர் சந்திரிகா அம்மையார். நவம்பர் தேர்தலில் வென்று ஜனாதிபதியான மஹிந்த ராஜபக்ஷவுக்கு கட்சித் தலைமை சந்திரிகா விடம் இருந்தமை இடைஞ்சலாக இருந்தது. அதைப் பிடுங்குவதற்கு அவர் ஓர் தந்திரோ பாயக் காய் நகர்த்தலை முன்னெடுத்தார். ஜனாதிபதி என்ற முறையில் கட்சிக்குள் தமக் குக் கிட்டிய செல்வாக்கு, அதிகாரம், வலிமை ஆகியவற்றைப் பிரயோகித்து, கட்சித் தலை வியான சந்திரிகாவை மீறி கட்சி யாப்புக்கு மாற்றம் கொண்டு வந்தார். கட்சியின் உறுப் பினர் ஒருவர் நாட்டின் ஜனாதிபதியானால் பதவி வழியாக அவரே கட்சியின் தலைவ ராகி விடுவார் என்பதுதான் அந்தத் திருத்தம். அதன் மூலம் கட்சியின் தலைமையை சந்தி ரிக்காவிடமிருந்து பிடுங்கினார் மஹிந்தர்.

2015 ஜனவரி ஜனாதிபதித் தேர்தலில் அது வரை சுதந்திரக் கட்சியின் பொதுச் செய லாளராக இருந்த மைத்திரிபால சிறிசேன, திடீரென எதிர்க்கட்சிகளின் பொது வேட்பாள ராக அன்னச் சின்னத்தில் சுதந்திரக் கட்சியின் தலைவரும், கட்சியின் வேட்பாளருமான ஜனா திபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு எதிராகக் களம் இறங்கினார்.

எதிர்க்கட்சிகளின் பொது வேட்பாளராகக் களமிறங்குவதற்கு முன்னர் மைத்திரிபால சிறிசேன சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலா ளர் பதவியில் இருந்து விலகினார். ஆனால், சுதந்திர கட்சியில் இருந்தோ அதன் அடிப் படை உறுப்புரிமையிலிருந்தோ விலக வில்லை. கட்சியின் உத்தியோகபூர்வ வேட் பாளருக்கு எதிராக, எதிர்க்கட்சிகளின் பொது வேட்பாளராகக் களம் இறங்கிய மைத்தி ரியை கட்சியிலிருந்து இடைநிறுத்தும் ஒழுக் காற்று நடவடிக்கையையும் தேர்தல் பிரச்சார நெருக்கடிகள், களேபரங்களுக்கு மத்தியி லும், தேர்தலில் எப்படியும் வெல்வோம் என்ற அதீத நம்பிக்கையிலும் கட்சித் தலை வர் மஹிந்தர் எடுக்காமல் விட்டுவிட்டார்.

மஹிந்த ராஜபக்ஷ எதிர்பாராத விதத்தில் தோல்வியுற்றார். மைத்திரி வென்று ஜனாதி பதி ஆனார். எதிர்க்கட்சி வேட்பாளராக நின்று போட்டியிட்டு வென்றாலும் தாம் சு.கவின் உறுப்பினர் என்று கூறிய மைத்திரி, சு.கவின் உறுப்பினர் ஒருவர் நாட்டின் ஜனாதிபதியானால் அவரே கட்சியின் தலைவர் என்று முன்னர் மஹிந் தர் கொண்டு வந்த கட்சியின் யாப்பு திருத் தத்தைக் காட்டி தலைமை பதவியை தமது நிறைவேற்றதிகார வலிமையையும் சேர்த் துப் பயன்படுத்தி மஹிந்தவிடமிருந்து பிடுங்கினார்.

இப்போது மைத்திரியிடமிருந்து தலை மைப் பதவியைப் பிடுங்கும் படலம் ஆரம்பித்திருக்கின்றது.

ஜனாதிபதி பதவியை வைத்திருக்கின் றமையைக் காட்டித்தான் கட்சித் தலை மைப் பதவியை மைத்திரி பிடுங்கினார், இப்போது ஜனாதிபதிப் பதவியை அவர் இழந்து விட்டார், கட்சியை மோசமா கச் சிதறடித்து விட்டார் என்று பல்வேறு காரணங்களைக் காட்டி மைத்திரிக்கு எதிராக சந்திரிகா குமாரதுங்க சுமத்திய குற்றச்சாட்டுகள் நீதிமன்றத்தில் வேலை செய்யத் தொடங்கி இருக்கின்றன.

என்ன அஸ்திரத்தை பயன்படுத்தி சந்திரி காவிடமிருந்து சு.க. தலைமைப் பதவியை மஹிந்தர் பிடுங்கினாரோ, அதே அஸ்தி ரத்திடம் அதே தலைமை பதவியைப் பின்னர் பறி கொடுத்தார் மஹிந்தர்.

இப்போது மஹிந்தவிடமிருந்து தலைமை பதவியை எப்படி மைத்திரியார் பிடுங்கினாரோ அதேபோன்ற ஒரு முறை யில் அந்தத் தலைமைப் பதவியை அவர் பறிகொடுக்கும் கட்டம் - கட்டாயம் - வந் திருக்கின்றது.

சரியோ பிழையோ நாட்டின் தேசிய மட்டத்தில் செல்வாக்கிழந்த - செல்லாக் காசாகிப்போன - தலைவர் மைத்திரி பால சிறிசேன என்பது துலாம்பரமான உண்மை.

தனது கட்சியின் பிற தலைவர்களை யும் உறுப்பினர்களையும் அரவணைத் துக் கட்டிக் காக்கும் வலிமையற்ற வெறும் கார்ட்போர்ட் தலைவரான அவ ரின் கண்முன்தான், மற்றைய பிரதான கட் சியான ஐக்கிய தேசியக் கட்சி போல சுதந் திர கட்சியும் கழுதை தேய்ந்து கட்டெறும் பான கதைக்கு வந்து நிற்கின்றது.

கட்சியினர் எல்லோரும் சேர்ந்து தலை மைத்துவத்தை தம்மிடமிருந்து பறிப்பதற்கு முன்னர், தாமாகக் கட்சித் தலைமையை அவர் மனமுவந்து கையளிப்பது - விட்டுக் கொடுப்பது - அவருக்குக் கட்சிக்குள் கடைசி நேரத்தில் ஒரு சொட்டு மரி யாதையாவது கிட்டுவதற்கு வழிவகுக் கும். மைத்திரியார் செய்வாரோ தெரி யாது.

# ரஷ்யாவின் ரோஸ்டோவ்வில் ஆளில்லா விமானத் தாக்குதல்





ரஷ்யாவின் ரோஸ்டோவ் பிராந்தியத்தில் உள்ள ஒரு விமான நிலையத்தில் ஆளில்லா விமானங்களை பயன்படுத்தி குறைந்தது ஆறு இராணுவ விமானங்கள் அழிக்கப்பட்டுள்ளன எனவும் எட்டு விமானங்களை மோசமாக சேதப்படுத்தியதாகவும் உக்ரைனிய அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இந்த நிலையில், ரஷ்ய பாதுகாப்பு அதிகாரிகள், 44 உக்ரைனிய ஆளில்லா விமானங்களை தாம் இடைமறித்ததாகவும், ஒரு மின் துணை நிலையம் தாக்கப்பட்டதாகவும் கூறியுள்ளனர்.

இந்தத் தாக்குதலானது போரில் கிய்வின் மிகப்பெரிய வான்வழித் தாக்குதல்களில் ஒன்றாக கருத்தப்படுகிறது. சமீப வாரங்களில் உக்ரைனின் மின் உற்பத்தி நிலையங்கள் உட்பட சிவிலியன் உள்கட்டமைப்பு மீதான தாக்குதல்களை ரஷ்யா தீவிரப்படுத்தியுள்ளது,

இதன் போது உக்ரைனின் ஆளில்லா விமான தாக்குதலில், விமான நிலையத்தின் பணியாளர்களில் சுமார் 20 பேர் கொல்லப்பட்டனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த தகவல்கள் உண்மையாக இருந்தால், மேற்படி தாக்குதல் உக்ரைனின் மிக வெற்றிகரமான எல்லை தாண்டிய தாக்குதல்களில் ஒன்றாக இருக்கும் என்று கூறப்படுகிறது.

இதேவேளை, கடந்த ஒக்டோபரில், அமெரிக்காவால் நன்கொடையாக வழங்கப்பட்ட நீண்ட தூர போலிஸ்டிக் ஏவுகணைகளைப் பயன்படுத்தி ரஷ்ய ஆக்கிரமிப்பு பிராந்தியங்களில் உள்ள இரண்டு விமான நிலையங்களில் ஒன்பது ரஷ்ய உலங்கு வானூர்திகள் அழிக்கப்பட்டுள்ள என உக்ரைன் தெரிவித்துள்ளது.

# திடீரென தீப்பிடித்து எரிந்த சுற்றுலா பயணிகள் கப்பல்




சுற்றுலா பயணிகள் நூற்றுக்கும் மேற்பட்டோருடன் தாய்லாந்தின் சூரத் தானி மாகாணத்தில் இருந்து கோ தாவோவுக்கு சென்ற படகு ஒன்று திடீரென தீப்பிடித்து எரித்து விபத்துக்குள்ளாகியுள்ளது.

தாய்லாந்தின் பிரபல கடற்கரை சுற்றுலா தலமாக கோ தாவோ விளங்குவதால் இங்கு உள்நாடு மட்டுமின்றி வெளிநாடுகளில் இருந்தும் ஏராளமான சுற்றுலா பயணிகள் வருகை தருவது வழமையானதாகும்.

இதனால், அச்சமடைந்த சுற்றுலாப்பயணிகள் படகில் இருந்து கடலுக்குள் குதித்தனர்.

இதனையடுத்து அங்கு விரைந்த கடலோர காவல் துறையினர் கடலில் தத்தளித்து கொண்டிருந்தவர்களை மீட்கும் பணியில் ஈடுபட்டனர்.

இதன்படி சுற்றுலா பயணிகள் அனைவரும் மீட்கப்பட்டு வேறு சில படகுகள் மூலம் கரைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளனர்.

இதன்மூலம் பெரும் அசம்பாவிதம் தவிர்க்கப்பட்டது. இது தொடர்பான காட்சிகள் அங்குள்ள சமூக வலைதளங்களில் வைரலாக பரவி வருகிறன.

# பிரதமர் மோடி நடிகர் போல் வலம் வந்து கொண்டிருக்கிறார்

## சிவகாசி வாகை சந்திரசேகர் உரை

“300 படங்களுக்கு மேல் நடித்த நான் தி.மு.க. தொண்டனாக உங்கள் முன் நிற்கிறேன். ஆனால் பிரதமர் நரேந்திர மோடி நடிகர் போல் வலம் வந்து கொண்டிருக்கிறார்.”

– இவ்வாறு சிவகாசியில் நடிகர் வாகை சந்திரசேகர் தெரிவித்துள்ளார்.

தமிழ்நாடு இயல் இசை நாடக மன்ற தலைவரான நடிகர் வாகை சந்திரசேகர், விருதுநகர் தொகுதியில் போட்டியிடும் காங்கிரஸ் வேட்பாளர் மாணிக்கம் தாகூரை ஆதரித்து சிவகாசி கந்தபுரம் காலனியில் பிரச்சாரம் செய்தார்.

இதம்போது அவர் உரையாற்றுகையில்,

“இந்த மக்களவை தேர்தல் மிக முக்கியமான தேர்தல். இதில் பா.ஜ.க. வெற்றி பெற்று விட்டால், அடுத்து இந்தியாவில் தேர்தலே நடக்காது. சர்வாதிகார ஆட்சி தான் நடக்கும்.

பல கலாச்சாரங்கள், வழிபாடுகளைக் கொண்ட இந்தியாவில், ஒரே நாடு, ஒரே மதம், ஒரே மொழி, ஒரே கடவுள், ஒரே தேர்தல் என கொண்டு வர மோடி முயற்சிக்கிறார். விருதுநகர் தொகுதியில்போட்டியிடும்காங்கிரஸ்வேட்பாளர்மாணிக்கம்தாகூருக்குகை சின்னத்தில் வாக்களித்து வெற்றி பெற வைத்து டெல்லிக்கு அனுப்பினால் தான், மோடியை வீட்டுக்கு அனுப்ப முடியும்.

முதல்வர் ஸ்டாலின் ஆட்சிக்கு வந்தவுடன் கொரோனா நிவாரணத் தொகை, மகளிர் உரிமைத்தொகை, காலை உணவு திட்டம் உள்ளிட்ட பல்வேறு திட்டங்களை கொண்டு



வந்துள்ளார். நான் 300 படங்களுக்கு மேல் நடித்துள்ளேன். அனைத்து வேஷங்களையும் போட்டுள்ளேன். உங்கள் முன் வரும்போது, திமுக தொண்டனாக, உங்களில் ஒருவனாக நின்று வாக்கு கேட்கின்றேன்.

ஆனால் பிரதமர் மோடி விதவிதமான ஆடைகளை அணிந்து கொண்டு, நாட்டு மக்களை மறந்து விட்டு, சினிமா நடிகர் போல் உலகம் முழுவதும் சுற்றி வருகிறார். ஜனநாயகம், சுயமரியாதையை காக்க, நமக்கு பிடித்த தெய்வங்களை வழிபட இண்டியா கூட்டணிக்கு வாக்களிக்க வேண்டும். காலம் காலமாக சிறுபான்மை மக்களுக்கு துணை நிற்பது திராவிட இயக்க மட்டும் தான்.” – என்றார்.





# பா.ஜ.கவுக்கு ராமதாஸ் பல்லக்கு தூக்குகிறார்

## முதல்வர் ஸ்டாலின் விமர்சனம்

“சாதிவாரிக் கணக்கெடுப்பு கூடாது என்று சொல்லும் கட்சி, பா.ஜ.க. அந்தக் கட்சிக்கு பல்லக்கு தூக்குவது யார்? மருத்துவர் ராமதாஸ். இந்த சந்தர்ப்பவாதக் கூட்டணியின் ரகசியம் அவருக்கு மட்டும்தான் தெரியும் என்று நினைக்கிறார். ஆனால், அவரைவிட உங்களுக்கு நன்றாகத் தெரியும்.”

– இவ்வாறு தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் நேற்று விழுப்புரம் மாவட்டம், விக்கிரவாண்டியில் நடைபெற்ற இண்டியா கூட்டணியின் மக்களவைத் தேர்தல் பிரச்சார கூட்டத்தில் உரையாற்றினார்.

இதன்போது அவர் பேசுகையில்,

“இன்றைக்கு நாடு மிகப்பெரிய ஆபத்தில் சிக்கியிருக்கிறது. பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட, பட்டியலின, பழங்குடியின, சிறுபான்மையினர் இட ஒதுக்கீட்டுக்கு ஆபத்து வந்திருக்கிறது. ஆபத்து என்றால், எப்படிப்பட்ட ஆபத்து? உதாரணத்துக்கு இரண்டு மட்டும் சொல்கிறேன்.

நாட்டை நிர்வகிக்கும், மத்திய அரசு செயலாளர்களில் 3 விழுக்காடு கூட பிற்படுத்தப்பட்ட சமுதாய மக்கள் இல்லை. அதேபோல், மத்திய அரசின் உயர்கல்வி நிறுவனங்களில் இருக்கும் பேராசிரியர், உதவிப் பேராசிரியர் போன்ற பணிகளில் இப்போதும் இதர பிறப்படுத்தப்பட்ட சமூகங்களையும், பட்டியலின, பழங்குடியின சமூகங்களையும் சேர்ந்தவர்கள் இட ஒதுக்கீடு முறையில் தேர்வாவது இல்லை.

நம்முடைய நாட்டை மத, இன, சாதி ,மொழி அடிப்படையில் பிளவுபடுத்தி இடஒதுக்கீட்டை ரத்து செய்யப் பத்தாண்டு கால ஆட்சியில் எல்லாவற்றையும் செய்தது மோடி அரசு. தமிழகத்துக்கு ஒரு சிறப்பு திட்டத்தைக்கூட கொடுக்காமல் வஞ்சித்தது மோடி அரசு. சாதிவாரிக் கணக்கெடுப்பு கூடாது என்று சொல்லும் கட்சி, பா.ஜ.க. அந்தக் கட்சிக்கு பல்லக்கு தூக்குவது யார்?

மருத்துவர் ராமதாஸ். தன்னுடைய உயிர் என்று அவர் சொல்லிக் கொள்ளும் சமூகநீதி கொள்கைக்குப் பரம எதிரியான பா.ஜ.கவோடு கூட்டணி வைத்து, அவர்களுடைய வேட்பாளர்களையும் பிரதமர் மோடியையும், அமித் ஷாவையும் போற்றிப் புகழ்கிறாரே, சில நாட்களுக்கு முன்பு வரை என்ன சொன்னார்? மோடி ஆட்சிக்கு எவ்வளவு மதிப்பெண் கொடுக்க வேண்டும் என்று ஒரு பேட்டியில் ராமதாஸிடம் நிருபர் கேள்வி கேட்டபோது, “சைபருக்கும் கீழ் ஒன்றும் இல்லை. இருந்தால், அதைதான் கொடுப்பேன்“ என்று சொல்லி, பா.ஜ.கவைக் கடுமையாக விமர்சித்தார்.

ஆனால், இப்போது அவர்களோடு கூட்டணி வைத்திருக்கிறார்? இந்த சந்தர்ப்பவாதக் கூட்டணியின் ரகசியம் அவருக்கு மட்டும்தான் தெரியும் என்று நினைக்கிறார். யாமறியேன் பராபரமே! ஆனால், அவரைவிட உங்களுக்கு நன்றாகத் தெரியும். அதனால், இதைப் பற்றி விளக்கமாகப் பேச விரும்பவில்லை. தி.மு.கவுக்குச் சமூகநீதி என்பது உயிர்மூச்சான கொள்கை. அதனால்தான், ஒரு கொள்கைக் கூட்டணியை அமைத்து, அதனுடைய வெற்றிக்காக இங்கு மேடையில் இருக்கும் வேட்பாளர்களுக்கு வாக்கு கேட்க வந்திருக்கிறேன். அமையவுள்ள இண்டியா கூட்டணி அரசு, நிச்சயம் சமூகநீதி அரசாக இருக்கும்.”– என்றார்.

# கொழும்பு பௌத்த வாலிபர் சங்கத்தினர் யாழ் நகரில் பல தரப்புக் கலந்துரையாடல்








கொழும்பு பௌத்த வாலிபர் சங்கத்தினர் (Colombo Young Men's Buddhist Association ) நேற்றய் யாழ்ப்பாணத்திற்கு வருகைதந்து பல்வேறு தரப்பினரையும் சந்தித்துக் கலந்துரையாடியிருந்தனர்.

நேற்றுப் பிற்பகல் யாழ்ப்பாணம் வணிகர் கழகத்தில் இந்த சந்திப்பு இடம்பெற்றது.

இதன்போது தற்போது நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி மற்றும் இன, மத ரீதியான பிரச்சினைகள் தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டது.

இந்தக் கலந்துரையாடலில் யாழ்ப்பாண வணிகர் கழக தலைவர் இ.ஜெயசேகரம், கொழும்பு பௌத்த வாலிபர் சங்கத்தின் தலைவர் மகேந்திர ஜெயசேகர, யாழ் மறைமாவட்ட குரு முதல்வர் அருட்தந்தை ஜோசப்தாஸ் ஜெயரட்ணம் அடிகளார், சைவ மகா சபையின் பொதுச் செயலாளர் பரா.நந்தகுமார், வாழ்நாள் பேராசிரியர் பொ.பாலசுந்தரப்பிள்ளை, பேராசிரியர் பூபாலசுந்தரம் ஐங்கரன், மத குருமார்கள், யாழ்ப்பாணம் வணிகர் கழகத்தினர், சிவில் சமூகத்தினர் கலந்துகொண்டிருந்தனர்.

# புளத்சிங்கள விபத்தில் ஒருவர் சாவு மோட்டார் சைக்கிள் எரிப்பு; பதற்றம்

புளத்சிங்கள – ஹல்வத்துர பிரதேசத்தில் நேற்றிரவு இடம்பெற்ற விபத்தை அடுத்து அந்தப் பகுதியில் பதற்றமான நிலை ஏற்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்த விபத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளமையுடன், விபத்தை ஏற்படுத்திய மோட்டார் சைக்கிள் பொது மக்களினால் தீவைக்கப்பட்டுள்ளதாகப் பொலிஸார் கூறியுள்ளனர்.

விபத்தில் 68 வயதான ஒருவர் கொல்லப்பட்டுள்ளமையுடன், மோட்டார் சைக்கிளை ஓட்டிவந்த நபர் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்த விபத்தில், இங்கிரியில் இருந்து புளத்சிங்கள நோக்கிப் பயணித்த மோட்டார் சைக்கிள் நபர் ஒருவர் மீது மோதியுள்ளது.

சம்பவ இடத்திலேயே அந்த நபர் உயிரிழந்துள்ளார். இதனால் ஆத்திரமடைந்த அப்பகுதி மக்கள் மோட்டார் சைக்கிளுக்குத் தீ வைத்தனர்.

பொலிஸார் தலையிட்டு தீயைக் கட்டுப்படுத்த முயற்சித்த போதும் அதற்குள் மோட்டார் சைக்கிள் முற்றாக எரிந்து நாசமாகியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

விபத்துக்கான காரணம் இதுவரை தெரியவரவில்லை. மோட்டார் சைக்கிள் ஓட்டி வந்தவர் புளத்சிங்கள பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

# வீதியில் சென்ற ஓட்டோவின் மீது கள்ளமாக வெட்டிய மரம் விழுந்தது

## சிறுவன் காயம்; ஓட்டோவும் நாசம்



நானுஓயா பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கிளாசோ தோட்டத்திற்கு செல்லும் வீதியில் நேற்று இரவு நானுஓயா பிரதான நகர் நோக்கி பயணித்துக் கொண்டிருந்த ஓட்டோ ஒன்றின் மீது மரம் விழுந்ததில் சிறுவன் ஒருவர் காயமடைந்தான்.

காயமுற்ற சிறுவன் நுவரெலியா மாவட்ட பொது வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகிறான் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

கிளாசோ பகுதியில் இருந்து நானுஓயா நோக்கி பயணித்து கொண்டிருந்த ஓட்டோ ஒன்றின் மீதே மரம் முறிந்து விழுந்தது.

வீதியோரத்தில் உள்ள காட்டுப்பகுதியில் மரம் ஒன்றைச் சட்ட விரோதமாக வெட்டிக் கொண்டிருந்த வேலையில் திடீரென மரம் வீதியில் சென்ற ஓட்டோ மீது வீழ்ந்தமையால் இந்த விபத்துச் சம்பவம் நேர்ந்துள்ளது. எனினும் அந்த மரத்தை வெட்டியவர் யார் என்று தெரியாத நிலையில் சம்பவம் குறித்து நானுஓயா பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

இந்த விபத்தினால் அந்த வீதியூடான போக்குவரத்து சற்று நேரம் பாதிப்பு ஏற்பட்டது. ஓட்டோவும் முழுமையாகச் சேதமடைந்துள்ளது.



வெற்றிகரமாக

10 ஆவது

ஆண்டில்

காலடி எடுத்து வைக்கிறது

ருபின்ஸ் வைத்தியசாலை

வடமராட்சி மக்களின் 24hrs ஆரோக்கிய காவலன்

உங்கள் நலமே

எங்கள் நோக்கம்

Ruhbins Hospital

Ruhbins Hospital (PVT) LTD

No 160 Pointpedro Road, Nelliady,Jaffna

Hotline +94 77 248 6642

# தமிழரசுக் கட்சி வழக்கில் நேற்று

## சுமந்திரன் கூறியவை




(ந.லோகதயாளன்)

தமிழரசுக் கட்சியின் நிர்வாக தெரிவுகளின்போது ஒரு சிறு தவறுகளைத் தவிர எவ்வித யாப்பு தவறுகளும் இடம்பெறவில்லை என ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

திருகோணமலை மாவட்ட நீதிமன்றில் தமிழரசு கட்சியின் நிர்வாகத் தெரிவை இரத்துச் செய்யும்படி தாக்கல் செய்யப்பட்டிருந்த மனு மீதான வழக்கு விசாரணை நேற்று இடம்பெற்றது. இதில் 7 ஆவது எதிராளியாகவும் தனக்குத் தானே சட்டத்தரணியாகவும் ஆஜராகி தனது சமர்பணத்தை முன் வைத்த பின்னர் அது தொடர்பாக ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்,

அவர் மேலும் கூறியவை வருமாறு:–

சென்ற தவணை இந்த வழக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது ஏழு எதிராளிகளிலே ஓர் எதிராளியாகிய நான் மன்றிலே சமுகமாகி இருக்கவில்லை. அதனால் என்னுடைய கருத்தையும் கேட்க வேண்டும் என்பதற்காக இன்றைய தினம் குறிக்கப்பட்டிருந்தது. சென்ற தடவை ஏனைய ஆறு எதிராளிகளும் வழக்காளி கேட்கின்ற அனைத்து நிவாரணங்களையும் வழங்கத் தயார் என்று மன்றுக்கு அறிவித்திருக்கின்றார்கள். வழக்கை விரைவாக முடிக்க வேண்டும் என்ற நோக்கத்தில் அவர்கள் அப்படிச் செய்திருந்தாலும் கூட, அதற்குஒ பின்னர் கூடிய இலங்கைத் தமிழரசுக் கட்சியின் அரசியல் குழுக் கூட்டத்திலே கட்சியினுடைய வரலாற்றிலே ஒரு சரித்திர ஆவணமாக கட்சி நிர்வாகிகள் யாப்பை தெரிந்து கொண்டே மீறி செயற்பட்டார்கள் என்கின்ற பதிவு இருப்பது விரும்பத்தக்கது அல்ல என்ற முடிவு எடுக்கப்பட்டது. இது தொடர்பாக கடந்த மாதம் வவுனியாவிலே கூடித் தீர்மானித்தோம்.

இந்த வழக்கிலே வழக்காளி சொல்கின்றவாறான யாப்புத் தவறுகள் எங்கும் நடக்கவில்லை என்பது எனது நிலைப்பாடாகும். ஒரு சிறு தவறுகளைத் தவிர, அதாவது தலைவராக அந்த வேளையிலே இருந்த மாவை சேனாதிராஜா அவர்கள் கடைசி நேரத்திலே ஆள்களை முறையின்றிச் சேர்த்து வாக்களிக்க வைத்ததை தவிர, பொதுச்சபையினுடைய சேர்க்கையிலே தவறில்லை. மத்திய செயற்குழு ஏற்கனவே தீர்மானங்களை நிறைவேற்றி இருக்கிறது என்கின்ற கட்சியினுடைய நிலைப்பாடு பதிவு செய்யப்பட வேண்டும் என்று அரசியல்குழு தீர்மானித்தது. இந்த பொறுப்பும் எனக்கு கொடுக்கப்பட்டது. அதன் பிரகாரம் இன்றைய தினம் (நேற்று) நான் என்னுடைய ஆட்சேபனைக் கூற்றை அமைத்து கடந்த நவம்பர் மாதம் மாதம் 5 ஆம் திகதி மத்திய செயற்குழு கூட்டத்திலே யாப்பின் விதி 5 இற்கு அமைவாக சில தீர்மானங்கள் எடுக்கப்பட்டதென்றும், அதன் பிரகாரமே இந்த பொதுச்சபை கூட்டப்பட்டதென்றும்,

தொடர்ச்சி ▼

## தவராஜா கூறியவை




(ந.லோகதயாளன்)


சுமந்திரன் ஆட்சேபனை தெரிவித்தமையால் இந்த வழக்கு எப்போது முடியும் என என்னால் கூற முடியாது என ஜனாதிபதி சட்டத்தரணி கே.வி.தவராசா தெரிவித்தார்

தமிழரசு கட்சியின் நிர்வாகத் தெரிவை ஆட்சேபித்துத் தாக்கல் செய்யப்பட்டிருந்த மனு மீதான வழக்கு எதிராளிகளில் ஒருவரான எம்.ஏ.சுமந்திரனின் கருத்தைக் கேட்டறிவதற்காக நேற்றைய தினம் விசாரணைக்காக அழைக்கப்பட்டிருந்தது. இதன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் நேற்று மேலும் தெரிவிக்கையில் கூறியவை வருமாறு:–

இந்த வழக்கை விரைவாக முடிக்க வேண்டும் என்பதற்காக நாங்கள் சில விட்டுக் கொடுப்புகளைச் செய்திருந்தோம். இதன் அடிப்படையில் சென்ற தவணை நீதிமன்றில் ஆஜராகியிருந்த 1ஆம், 2ஆம், 3ஆம், 4ஆம், 5ஆம், 7ஆம் எதிராளிகள் 6 பேரும் தங்களது சம்மதத்தை தெரிவித்திருந்தார்கள். குறித்த தினத்தின் 6அம் எதிராளியான பாரா ளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் ஆஜராகி இருக்காத காரணத்தினால் அவரது கருத்தை அறியும் முகமாக நீதிமன்றம் இன்று (5) தவணையிட்டிருந்தது. இன்றைய தினம் ஆஜரான 6 ஆம் எதிராளியாக குறிப்பிடப் பட்டிருக்கின்ற ஜனாதிபதி சட்டத்தரணியும், நாடாளுமன்ற உறுப்பினருமாகிய எம்.ஏ.சுமந்திரன் மற்றைய ஆறு பேருடைய கருத்துக்கு மாறாக தனது ஆட்சேபனைகளைத் தெரிவித்தமையோடு எழுத்து மூலமான சமர்ப்பணத்தையும் தாக்கல் செய்தார். இதனால் நாம் வழக்கை விரைவாக முடிக்க வேண்டும் என்ற எமது நோக்கம் இனி சாத்தியப்படக்கூடிய சூழல் இல்லை என்பதை வெளிப்படையாகக் கூற வேண்டும். இந்த வழக்கை வெல்ல முடியும் என்ற நிலை இருக்கின்றபோதும் இந்த வழக்கை நீண்ட காலத்திற்கு கொண்டு செல்ல விரும்பாத காரணத்தினாலேயே நாம் பல விட்டுக்கெடுப்புகளை மேற்கொண்டிருந்தோம். ஆனால் இனி அது நடக்காது.

அத்துடன் எம்.ஏ.சுமந்திரன் ஆட்சேபனை தெரிவித்திருப்பதால் நாமும் ஆட்சேபனை தெரிவித்தாக வேண்டும். நாம் என்ன எதிர்பார்த்தோமோ அது நடந்து விட்டது. இனி இந்த வழக்கு முடிவுறுவதற்கு எவ்வளவு காலம் போகும் என்பதை என்னால் கூற முடியாது. – எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.



## நாடாளுமன்ற உறுப்பினராக எம்.ஜி. வீரசேன நியமனம்

அநுராதபுரம் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எச். நந்தசேன காலமானமையையடுத்து ஏற்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர் வெற்றிடத்திற்கு எம்.ஜி.வீரசேன நியமிக்கப்பட்டுள்ளார் எனத் தேர்தல்கள் ஆணைக்குழு குறிப்பிட்டுள்ளது.

2020 பொதுத்தேர்தலில் பொதுஜன பெரமுனவின் அநுராதபுரம் மாவட்ட பட்டியலில் எச். நந்தசேனவுக்கு அடுத்ததாக எம்.ஜி. வீரசேன அதிகளவு விருப்பு வாக்குகளைப் பெற்றிருந்தார்.

திடீரென ஏற்பட்ட சுகவீனம் காரணமாக அனுராதபுர போதனா வைத்திசாலையில் சிகிச்சை பெற்று வந்த எச். நந்தசேன நேற்று முன்தினம் காலமானார்.



## பாடத்திட்டத்தை நவீனமயமாக்கும் முன்னோடி நடவடிக்கை ஆரம்பம்

பாடசாலை பாடத்திட்டத்தை நவீனமயமாக்குவதற்கான முன்னோடி நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக தேசிய கல்வி நிறுவகம் தெரிவித்தது.

57 ஆரம்ப பாடசாலைகளிலும் 113 இடைநிலைப் பாடசாலைகளிலும் இந்த திட்டம் நடைமுறைப்படுத்தப்படுவதாக நிறுவகத்தின் பணிப்பாளர் நாயகம் பேராசிரியர் பிரசாத் சேதுங்க குறிப்பிட்டுள்ளார்.

பாடசாலைகளில் தரம் 1, தரம் 6 மற்றும் தரம் 10 இற்கான பாடத்திட்டமே நவீனமயமாக்கப்படவுள்ளது.

அடுத்த ஆண்டு முதல் நாட்டிலுள்ள அனைத்துஒ பாடசாலைகளிலும் பாடத்திட்டம் நவீனமயமாக்கப்படவுள்ளது.

பாரம்பரிய கற்பித்தல் முறையில் இருந்து விலகி, மாணவர்களை மையமாகக் கொண்ட கல்வி முறையை உருவாக்குவதே பாடத்திட்ட நவீனமயமாக்கலின் நோக்கம் எனத் தேசிய கல்வி நிறுவகத்தின் பணிப்பாளர் நாயகம் பேராசிரியர் பிரசாத் சேதுங்க தெரிவித்துள்ளார்.

புதிய பாடத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படுவதன் மூலம் பரீட்சைக்காக கற்றல் எனும் மனப்பான்மையை மாணவர்களிடமிருந்து நீக்கி, புத்தாக்க சிந்தனை கொண்ட மாணவர் சமுதாயத்தை உருவாக்க முடியுமென அவர் தெரிவித்துள்ளார்.

## 21 தமிழக கடற்றொழிலாளர்களுக்கு ஒத்திவைப்புச் சிறையுடன் அபராதம்!

இலங்கைக் கடற்பரப்பினுள் அத்துமீறி நுழைந்து கடற்றொழிலில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் கைதான தமிழக கடற்றொழிலாளர்களுக்கு ஒரு வருட சிறைத்தண்டனை விதித்து அதனை 05 வருடத்திற்கு மன்று ஒத்திவைத்துள்ளது.

அத்துடன் தலா 20 ஆயிரம் ரூபாய நஷ்ட ஈடு செலுத்த உத்தரவிட்ட மன்று, ஆயிரம் மற்றும் ஆயிரத்து 500 ரூபா தண்டமும் விதித்துள்ளது.

கடந்த 17ஆம் திகதி காரைநகர் கடற்பரப்பினுள் அத்துமீறி நுழைந்து, கடற்றொழிலில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் 21 தமிழக கடற்றொழிலாளர்கள் கைது செய்யப்பட்டமையுடன் அவர்களின் இரண்டு படகுகளையும் கடற்படையினர் கைப்பற்றி இருந்தனர்.

அவர்கள் மறுநாள் , கடற்றொழில் நீரியல் வளத் திணைக்களத்தினர் ஊடாக ஊர்காவற்துறை நீதிவான் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டமையை அடுத்து , நீதிமன்ற உத்தரவில் விளக்கமறியலில் வைக்கப்பட்டனர்.

இந்நிலையில் இந்த வழக்கு நேற்றைய தினம் வெள்ளிக்கிழமை விசாரணைக்கு எடுத்து கொள்ளப்பட்ட போது, கடற்படையினரைத் தாக்கி சிறு காயத்தை ஏற்படுத்தியமை, சட்டவிரோதமான முறையில் கூட்டம் கூடியமை, அரச கடமைகளுக்கு இடையூறு விளைவித்தமை மற்றும் பொது சொத்துக்களுக்கு சேதம் விளைவித்தமை ஆகிய குற்றச்சாட்டுக்கள் முன் வைக்கப்பட்டன.

குற்றச்சாட்டுக்களை கடற்றொழிலாளர்கள் ஏற்றுக்கொண்டமையை அடுத்து, தலா 20 ஆயிரம் ரூபா நஷ்ட ஈடு செலுத்த மன்று உத்தரவிட்டது. அத்துடன் ஆயிரம் மற்றும் ஆயிரத்து 500 ரூபா தண்டமும் விதித்துள்ளது.

அத்துடன் ஒரு வருட சிறைத் தண்டனை விதித்து அதனை 05 வருடத்திற்கு மன்று ஒத்திவைத்துள்ளது.

**சுமந்திரன்...** தொடர்ச்சி ▲

20 பேருக்கு அண்ணளவாக முறையின்றி சேர்க்கப்பட்டிருந்தாலும், தலைவர் தெரிவிலே அது தாக்கத்தைச் செலுத்தாத காரணத்தினால் நாங்கள் அது சரியான சேர்க்கை என்று மன்றுக்கு இன்று தெரிவித்திருந்தோம். இது என் சார்பிலே நானாகத் தோன்றி அணைத்த ஆட்சேபனை கூற்றிலே இருக்கின்றது. வழக்கை விரைவாக முடிக்க வேண்டும் என்ற நோக்கில் இன்றைய தினமே எனது ஆட்சேபனைக் கூற்றை மன்றிலே அணைத்திருக்கின்றேன். இதற்கான விசாரணை தினம் ஒன்று நியமிக்கப்பட வேண்டி இருந்த போதிலேயும் நான் அப்படியான ஆட்சேபனை கூற்றை அணைத்த பின்னர் 1ஆம், 7ஆம் எதிராளிகளினுடைய சட்டத்தரணி தாங்களும் யாப்பு மீறல் நடைபெறவில்லை, அதில் 20 பேர் சேர்த்துக் கொண்டதை ஏற்றுக் கொள்கின்றோம், வேறு தவறுகள் இல்லை என்றும், யாப்புத் திருத்தங்கள் சம்பந்தமாக அவர்கள் அந்த ஆட்சேபனைக் கூற்றோடு தயாராக இல்லாது இருந்த நிலையிலே இம்மாதம் 24ஆம் திகதிக்கு அவர்கள் ஆட்சேபனை அணைப்பதற்காக வழக்கு தவணையிடப்பட்டுள்ளது. மற்றைய எதிராளிகளும் அதே விண்ணப்பத்தை செய்த காரணத்தினால் அவர்களுக்கும் ஆட்சேபனைக் கூற்றை அணைப்பதற்காக இம் மாதம் 24 ஆம் திகதி வரை அவகாசம் கொடுக்கப்பட்டுள்ளது. - என அவர் மேலும் தெரிவித்தார்.




**உரலார் கேள்வி:-தமிழ்நாட்டுச் சங்கீத வித்துவான் வு.ஆ.கிருஷ்ணா பற்றிய சர்ச்சைகள் இணையத்தளங்களில் பரவலாக அடிபடுகிறதே, பாரத்தீர்க்ளா? அவருக்குச் 'சங்கீத கலாநிதி' விருது வழங்கப்பட இருப்பதை எதிர்த்து ரஞ்சனி, காயத்ரி, ரவிக்கிரண் போன்ற பிரபலமான வித்துவான்கள் போர்க்கொடி தூக்கி இருக்கின்றனரே. இதுபற்றிய உங்களது கருத்து யார் பக்கச் சார்பானது என்று சொல்லமுடியுமா?**

**உலக்கையார் பதில் :-** போட்டிக்களத்தில் குதித்திருப்பவர்கள் எல்லோரும் மாபெரும் இசை விற்பன்னர்கள். இவர்களில் எவரது கருத்துச் சரி என்று தீர்ப்புரைக்கும் தகுதி எனக்கில்லை. ஆனாலும் இப்பிரச்சினை பற்றி எனக்கென்று சில கருத்துக்கள் உண்டு. அதை மட்டும் இங்கு பதிவு செய்ய விரும்புகிறேன்.

இன்றைக்கிருக்கும் விரல்விட்டு எண்ணக் கூடிய உயர் வித்துவான்களில் T.M.கிருஷ்ணாவும் ஒருவர் என்பதில் எவருக்கும் சந்தேகம் இருக்க வாய்பபபில்லை. பாவத்துடன் கூடிய தன்னுடைய இசையால் சபைகளைக் கட்டிப்போடும்


T.M.கிருஷ்ணா

வல்லமையுடையவர். தனது பாடும் பாணியால் இசைத் தேவதைகளைத் தானும் கண்டு இரசிகர்களுக்கும் காட்டிச் சிலிரப்பூட்டுபவர் அவர்.

பாடத்தொடங்கிய சில மணித் துளிகளுக்குள்ளேயே தன் இசைக்குள் தானே கரைந்து போகும் இவரது பாணி அலாதியானது. நான் மதிக்கின்ற, மயங்குகின்ற இசைக்கலைஞர் அவர். அவருக்கு மியூசிக் அக்கடமி 'சங்கீத கலாநிதி' விருதினை வழங்க இருப்பது மிகப் பொருத்தமான செயலென்றே கருதுகிறேன்.

அப்படியானால் உண்டாகி இருக்கும் சரச்சைகளில் நீங்கள் கிருஷ்ணாவின் பக்கம்தானா என்று கேட்பீர்கள். 'நிச்சயமாகஇல்லை!' என்பதுதான் உங்கள் கேள்விக்கான எனது பதில்.

முன்னுக்குப் பின் முரண்படுகிறேன் என நினையாதீர்கள்! நான் முதற்பந்தியில் சொன்னது கிருஷ்ணாவின் இசை பற்றிய எனது அபிப்ராயம் மட்டுமே! நடந்து கொண்டிருக்கும் சர்ச்சை பற்றிய அபிப்பிராயத்தினை இனித்தான் சொல்லப் போகிறேன்.

இயல் துறையிலும், இசைத்துறையிலும் நான் பெரிதும் மதிக்கின்ற இரண்டு பேர்கள் அண்மைக் காலமாக வீணான சர்ச்சைகளுக்குள் தாமாக அகப்பட்டுக் கொணடிருக்கிறார்கள். ஒருவர் 'சொல்வேந்தர்' சுகிசிவம், மற்றவர் 'சங்கீத வித்துவான்' வு.ஆ.கிருஷ்ணா. சர்ச்சைகள் இவர்களைத் தேடி வருவதில்லை. இவர்கள்தான் சரச் சைகளைத் தேடிப்போகிறார்கள் போல் தெரிகிறது.

மரபு ரீதியா பாதையில் நடந்து, தத்தம் துறைகளில் உச்சந்தொட்ட இவர்கள் திடீரெனப் புதுமையும் புரட்சியும் பேசி, பலரதும் வெறுப்புக்கும், தேவையில்லாத விமரச்னத்திற்கும் ஆளாகிக் கொண்டிருக்கிறார்கள். அது மனதை வலிக்கச் செய்கிறது.

அவர்கள் பேசும் புதுமை, புரட்சிக் கருத்துக்கள், அவர்களின் சுய விளம்பரத்திற்குப் பயன்படுமேயன்றி வேறு எவர்க்கும் பயன்தராது என்பது எனது முடிவான கருத்து.

அடிப்படையில் T.M.கிருஷ்ணா இரண்டு கருத்துகளை முன்வைக்கிறார். கர்நாடக இசையைப் பாமர மக்களிடம் கொணடு செல்ல வேண்டும் என்பது அவரது முதல் கருத்து. உயர்ஜாதிப் பிராமணர்கள், அவ்இசையைப் பாமரமக்களிடம் கொண்டு செல்லவிடாமல் தடுத்து விட்டனர் என்பது அவர் சொல்லும் இரண்டாவது கருத்து.

கர்நாடக இசையைப் பாமர மக்களிடம் கொணடு செல்ல வேண்டும் என்ற கிருஷ்ணாவின் கருத்தில் எவருக்கும் முரண்பாடிருக்க வாய்ப்பில்லை உயர்ஜாதிப் பிராமணர்கள் அவ் இசையைப் பாமர மக்களிடம் கொணடு செல்லவிடாமல் தடுத்து விட்டனர் என்ற கருத்துத்தான் மறுப்புக் குரியதாகிறது.

கர்நாடக சங்கீதத்தின் ஆழம் பற்றி, மற்றவர்கள் சொல்லித் தெரிய வேண்டிய நிலையில் கிருஷ்ணா இல்லை. கர்நாடக இசை என்பது இசை விருட்சங்களை அடையாளப்படுத்திக் காட்டுவதோடு நில்லாமல், அவ் விருடசங்களின் வேரையும், வித்துக்களையும் கூடத் தொட்டுக் காட்டும் அபூர்வ கலை ஆகும்.

அக் கலையில் புலமை பெறவேண்டுமானால், அக்கலையோடு தலைமுறைகள் கடந்த தொடர்பு இருக்க வேண்டும். பிராமணர்கள் அத் தொடர்பைப் பல தலைமுறைகளாய்ப் பேணி, அக்கலையைத் தமதாக்கிக் கொண்டிருக்கிறாரகள். அதனைப் பிழையென்று எவரும் சொல்ல முடியாது.

'அதெப்படி ஒரு கலையை ஒரு ஜாதிக்குரியதாய் ஆக்கலாம்?' என்று உடனே சிலர் கொதிப்பார்கள்.

தொடர்ச்சி ▼

தொடர்ச்சி ▲

யாரும் அக்கலையைப் பிராமணஜாதிக்கு உரித்தாக எழுதிக் கொடுக்கவில்லை. பிராமணர்கள் தலைமுறை கடந்த பேணுதலால் அக் கலையைத் தமதாக்கிக் கொண்டுள்ளனர். அவ்வளவே!

இதில் ஒன்றும் புதினமில்லை. குறித்த சில ஜாதியினர் வீரத்தைத் தமதாக்கிக் கொண்டாற் போலவும், குறித்த சில ஜாதியினர் அரசியலைத் தமதாக்கிக் கொண்டாற் போலவும், குறித்த சில ஜாதியினர் விவசாயம், கடற்தொழில் போன்ற சில தொழில்களைத் தமதாக்கிக் கொண்டாற் போலவும் நடந்த ஒன்றுதான் இதுவும்.

விளக்கத்திற்காக மீண்டும் சொல்கிறேன். கடற்தொழிலைக் குறித்த சில ஜாதியினர் மட்டும்தான் பல தலைமுறைகளாகத் தமதாக்கி வைத்திருக்கின்றனர். அங்ஙனம் பல தலைமுறைகளாய் அத்தொழிலோடு அவர்கள் வைத்திருக்கும் தொடர்பால் அத் தொழில்பற்றிய நுட்பங்கள் அவர்களுக்குக் கைவந்திருக்கிறது. அதனால்தான் அத் தொழிலை அந்த ஜாதியினரே தொடர்ந்து பேணி வருகிறார்கள்.

எவராவது இவர்கள் இத்தொழிலைத் தமக்காக்கி, மற்றைய ஜாதியினருக்கு இக் கலை சேராமல் இருட்டடிப்புச் செய்து விட்டார்கள் என்று சொன்னால் அதனை யாரும் ஏற்பார்களா? அல்லது அப்படிச் சொல்லத்தான் முடியுமா? மீனவர்கள் அத் தொழிலைத் தமதாக்கியது போலத்தான், பிராமணர்கள் இசைக்கலையைத் தமதாக்கி வைத்திருக்கின்றாரகள். அது அவரவர் திறமையைப் பொறுத்த விடயம். இதில் குறை சொல்ல ஒன்றுமே இல்லை.

இன்னும் சொல்லப் போனால் 'பறை'தான் எங்கள் கலை. அதனை நாங்கள் தலைமுறை தலைமுறையாய்ப் பேணுகிறோம் என்று சில பேர் இன்று சொல்லி வருவது சரியென்றால், பிராமணர்கள் கர்நாடக இசையைத் தமதாக்கிக் கொண்டதையும் நாம் ஏற்றுத்தான் ஆக வேண்டும்.

ஒருமுறை மறைந்த இசைமேதை மஹாராஜபுரம் சந்தானம் அவர்களைப் பேட்டி கண்ட ஒருவர், இசையாற்றலுக்கும் குடும்பப் பின்னணிக்கும் என்ன தொடர்பு? என்று கேட்ட போது, அவர் தன் அருகில் நின்றிருந்த தனது 5 வயதுப் பேரக் குழந்தையைக் காட்டி, இவளால் இப்போதே நூறு இராகங்களை இனங் காண முடியும் என்றார்.

தொடர்ந்த அவர் இந்த ஆற்றலை அவள் படித்துப் பெற்றுக் கொள்ளவில்லை. எங்கள் வீட்டில் எவரேனும் ஒருவர் எந்த நேரமும் பாடிக் கொண்டுதான் இருப்பார்கள். எங்கள் வீட்டில் நடக்கும் உரையாடல் என்பது இராகம் பற்றியதாயும், ஸ்வரங்கள் பற்றியதாயும், அவற்றைப் பாடும் முறை பற்றியதாயும் தான் எப்போதும் இருக்கும்.

அது மட்டுமல்லாமல் எங்கள் வீட்டிற்கு வரும் விருந்தினர்கள் கூட எப்போதும் இசை பற்றிதான் பேசுவார்கள். அவற்றையெல்லாம் கேட்டுக் கேட்டுத் தான் இவளுக்கு இந்த இசை ஆற்றல் வந்தது. இது தான் இசைக்கும் குடும்பப் பின்னணிக்கும் இருக்கும் தொடர்பு என்றார். (பின்னாளில் ஒரு கார் விபத்தில் அவரும் அவரது பேரக் குழந்தையும் ஒன்றாய் இறந்து போனமை பெரிய கொடுமை).

கிருஷ்ணா மிருதங்க வாத்தியத்திற்குத் தோல் தந்தவர்களைப் பற்றி எழுதுகையில் அவர்களது திறமையைச் சுட்டிக்காட்டி, அவர்களது ஆற்றலை உயர்ஜாதி வித்துவான்கள் இருட்டடிப்புச் செய்து விட்டனர் எனச் சொல்லி இருக்கிறார்.

அது சற்று மிகையான கருத்தென்றே நினைக்கிறேன். மருத்துவத்துறையில் 'ஸ்டெதஸ்கோப்' செய்தவரைப் பற்றி யாரும் அதிகம் பேசுவதில்லை. அக்கருவியைப் பயன்படுத்தி வைத்தியம் செய்யும் டாக்டர்களின் ஆற்றல்களைப் பற்றித்தான் எல்லோரும் பேசுகிறார்கள். டாக்டர்கள் இக்கருவியைக் கண்டுபிடித்தவர்களின் ஆற்றலை இருட்டடிப்புச் செய்து விட்டார்கள் என்று சொல்வது எவ்வளவு வேடிக்கையானதோ அது போலத்தான் கிருஷ்ணா சொல்வதும் இருக்கின்றது.

சேரிகளுக்கு இசையைக் கொண்டு செல்ல வேண்டும் என்னும் கிருஷ்ணாவின் கருத்தோடு யாரும் முரண்படப் போவதில்லை. இக்கருத்தோடு மற்றவர்கள் உடன்படுவது அவரவர் விருப்பத்தைப் பொறுத்தது. அக் காரியத்தைக் கிருஷ்ணா தாராளமாகச் செய்யலாம். அவரைப் போன்ற 'கருத்துச் சண்டியர்' ஒருவரைத் துணிந்து யாரும் எதிர்க்கப் போவதில்லை. எதிர்க்க வேண்டிய தேவையும் இல்லை.

கிருஷ்ணா செய்த தவறு என்னவென்றால், சேரிகளுக்குள் புகுந்து தன்னைப் போன்ற ஒரு மகா வித்துவானை அங்கு உருவாக்கிக் காட்டிவிட்டு, அதன்பிறகு அவர் இச் சர்ச்சையைத் தொடங்கியிருக்க வேண்டும்.

அதைவிடுத்து விண்ணளவு நீண்ட இசைப் பாதையில், ஒரு மண்ணளவைக்கூடச் சேரி மக்களுக்குள் கொண்டு சேர்க்காமல், நான் புரட்சி செய்கிறேன் என்று பேசுவதில் அர்த்தம் இருப்பதாய் எனக்குப் படவில்லை.

கிருஷ்ணா இந்த் சேரிப் புரட்சியை இசையோடு ஏன் நிறுத்திவிடுகிறார்? இன்னும் மேலேபோய்க் கல்யாண சம்பந்தம் போன்ற விடயங்களில் கூட இப்புரட்சியை நீடித்துக் காட்டலாமே?

பக்திமயமான நம் இசை மரபுக்குள், 'கடவுள் இல்லை' என்று சொல்லி நம் தெய்வங்களைப் பல வகையாலும் இழிவு செய்த பெரியாரைப் பற்றிப் பாடல் அமைத்துக் கச்சேரிகளில் பாடுவதென்பது கிருஷ்ணாவுக்கு மிகையில்லாத செயலாய்த் தோன்றலாம். ஆனால் தலைமுறை தலைமுறையாகப் பக்திமயமான இசையைக் கேட்டுப் பழகிய நம் இசைச் சபைகளுக்கு, நிச்சயம் அது மிகையாய்த்தான் இருக்கும் என்பதில் எந்த ஐயமும் இல்லை.

அது தவிரவும் கர்நாடக இசைக்குள் பெரியாரைப் புகுத்திப் பாடினால் பெரியாரது தொண்டர்களுக்கே அது வேதனையை அன்றி வேறு எதையும் தராது என்பது நிச்சயம். இன்று உயிரோடு இருந்திருந்தால் பெரியார் கூட அச்செயலை இரசித்திருக்க மாட்டார்.

இச்சர்ச்சையில் ரஞ்சனி, காயத்திரி போன்ற ஒரு சிலர் துணிந்து தமது மனக்கருத்தைப் பதிவு செய்திருக்கிறார்கள். கர்நாடக இசைத்துறையைச் சேர்ந்த பலரது கருத்தும் அதுவாகத்தான் இருக்கும் என்பதில் ஐயத்திற்கு இடமில்லை. மற்றவர்கள் கிருஷ்ணா பெற்று வைத்திருக்கும் ஆளுங் கட்சியினரின் ஆதரவைக் கருத்தில் கொணடும், கிருஷ்ணாவை வழி மொழியும் சிலரின் கீழ்மை வாசகங்களிற்கு அஞ்சியும்தான் மௌனித்து இருக்கிறார்கள் என்று நினைக்கிறேன்.

கிருஷ்ணாவின் புரட்சிக் குரலுக்கு எதிராகப் புரட்சிக் குரலெழுப்பிய ரஞ்சினி, காயத்திரி போன்றோரைப் பாராட்டாமல் இருக்க முடியாது.

**சல்லடையார் சலிப்பு - அப்பனைப்பாடும் வாயால் சுப்பனைப்பாடுவேனோ? ஹீ....ஹீ....!**

✦✦✦✦✦✦✦✦✦✦✦✦✦✦✦✦

**உரலார் கேள்வி:- தந்தை செல்வாவின் 126ஆவது ஜெயந்தி தினத்தில் கலந்து கொண்டீர்களாக்கும். தந்தை செல்வா தமிழ் மக்களால் போற்றப்பட்டமைக்கான சில காரணங்களை எடுத்து விடுங்களேன் பாரப்போம்.**

**உலக்கையார் பதில் :-** மலையகத் தமிழர்களுக்கான பிரஜா உரிமையை, சிங்கள அரசு பறிக்க முற்பட்டபோது அதற்கு ஆதரவுதர முன்வந்த ஜீ.ஜீ. பொன்னம்பலம் அவர்களை எதிர்த்து, கட்சியை விட்டு வெளியே வந்து, தமிழரசுக் கட்சியை ஆரம்பித்த அவரது செயல் வடக்குக் கிழக்குத் தமிழர்கள் மட்டுமன்றி இலங்கை வாழ் தமிழர்கள் அனை

தொடர்ச்சி ▼

**தொடர்ச்சி▲**

வரையும் ஒன்றுபடுத்தச் செய்ய முன்னோடிச் செயலாய் அமைந்தமை.

- தமிழினத்திற்கான நெருக்கடி அதிகரித்த போது தன்மானம் பார்க்காமல் தானே இறங்



கிப் போய் ஜீ.ஜீ.பொன்னம்பலத்துடன் பேசி தமிழ்க் கட்சிகளை ஒன்று படுத்திக் காட்டிய பெருந்தன்மை.

- கட்சிப் பணத்தைத் தனக்காக்க முயலாமல், தன் பணத்தைக் கட்சிக்காக்கிய தியாகம்.
- தனக்கென வந்த எந்த அன்பளிப்பையும் பெற்றுக் கொள்ளாமல், அவற்றை நிராகரித்து பொதுமக்களுடன் பஸ்ஸில் கூடப் பயணிக்கத் தயங்காத அவரது சுய ஒழுக்கம்.
- சமஷ்டியைத் தமிழரகளின் கோரிக்கையாய் முன்வைத்தாலும் காலச் சூழநிலைக்கேற்ப அக்கொள்கையில் விட்டுக் கொடுப்புக்களைச் செய்யத் தவறாத அவரது தீர்க்க தரிசனம்.
- நாடாளுமன்றில் பேரினத்தாராலும் மதிக்கப்பட்ட தனித் தகுதி.
- மற்றவர்களைத் தூண்டிவிட்டுத் தான் பின் னிற்காமல் தானே முன்னின்று போராட்டங் களை நடத்திய வீரம்.

- இப்படி அவரது பெருமைக்கான காரணங்களை வரிசைப் படுத்திக் கொண்டே போகலாம். பதவிப் போட்டியால் கட்சி அழியப்போவது பற்றிக் கூடக் கவலைப்படாமல் இருக்கும் தலைவர்கள், தந்தை செல்வாவின் வாழ்க்கை வரலாற்றை ஒருமுறை எடுத்துப் படிக்கவேண்டும்.

**சல்லடையார் சலிப்பு :- தந்தைபோல் இருந்தால் உலகினில் நம் தலைவரக்கு இத் தாழ்வெல்லாம் வருமோ ஐயா? ஹி..ஹி...ஹி. இது எப்படி இருக்கு?**

✢✢✢✢✢✢✢✢✢✢✢✢✢

**உரலார் கேள்வி:- இரண்டே வரிகளில் சொல்லுங்கள். தமிழினம் உருப்பட என்ன செய்ய வேண்டும்?**

**உலக்கையார் பதில் :-** நம் மக்களின் வெளி நாட்டு மோகம் முதலில் ஒழிய வேண்டும்.

தம் விருப்பப்படி ஈழத்து அரசியலை மாற்ற நினைக்கும் புலம்பெயர் தமிழர்களின் எண்ணம் தடுக்கப்பட வேண்டும் அவ்வளவே.

**சல்லடையார் சலிப்பு :- வாரிதியாருக்கு புலம்பெயர் தமிழர்களோடு அப்படி என்ன தான் கோபமோ தெரியவில்லை.**

✢✢✢✢✢✢✢✢✢✢✢✢✢




# ஜனாதிபதித் தேர்தலையும் பொதுத்தேர்தலையும் ஒரே நாளில் நடத்துவது சாத்தியமேயில்லையாம்

## தேர்தல்கள் ஆணைக்குழு தகவல்

ஜனாதிபதி தேர்தலையும் பொதுத் தேர்தலையும் ஒரே நாளில் நடத்து வது சாத்தியமில்லை எனத் தேர்தல் கள் ஆணைக்குழு தெரிவித்துள் ளது.

தேர்தல் நடத்தும் முறைமைக்கு அமைய இது சாத்தியமில்லை என சிரேஷ்ட அதிகாரி ஒருவர் தெரிவித் துள்ளார்.


ஜனாதிபதி தேர்தலுக்கு நாட ளாவிய ரீதியில் ஒரே ஒரு உத்தி யோகபூர்வ வாக்குச்சீட்டு மட்டுமே வழங்கப்படும். எனினும், பொதுத் தேர்தலுக்காக 22 தேர்தல் மாவட் டங்களுக்கு 22 வாக்குச்சீட்டுகள் வழங்கப்பட வேண்டும் என ஆணைக் குழுவின் அதிகாரி சுட்டிக்காட்டியுள் ளார்.

மேலும், ஒரே நேரத்தில் இரண்டு தேர்தல்களை நடத்தி அதில் வாக் களிப்பது குறித்து நாட்டிலுள்ள வாக் காளர்களுக்கு சரியான தெளிவு படுத்தல் இல்லாமை இதன் முக்கிய பிரச்சினையாக உள்ளதாகவும் தேர் தல் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

அத்துடன், சில அரசியல் கட்சிகள் பொதுத்தேர்தலில் போட்டியிட்டு ஜனா திபதி தேர்தலில் வேறு ஒரு வேட் பாளருக்கு ஆதரவு வழங்கினால் சிக்கல் நிலை உருவாகும் எனவும் ஆணைக்குழு குறிப்பிட்டுள்ளது.

இவ்வாறான பல நடைமுறைச் சிக்கல்கள் காரணமாக தற்போது ஜனாதிபதி தேர்தலையும் பொதுத் தேர்தலையும் ஒரே நாளில் நடத்த முடியாது என தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இதுவரை எந்தக் கட்சியும் ஜனா திபதி தேர்தலையும் பொதுத்தேர் தலையும் ஒரே நாளில் நடத்துமாறு கோரிக்கை விடுக்கவில்லை எனவும் ஆணைக்குழு குறிப்பிட்டுள்ளது.



# இலங்கையின் உத்தியோகபூர்வ கையிருப்பு மார்ச்சில் உயர்ந்தது

இலங்கையின் உத்தியோகபூர்வ கையிருப்பு கடந்த பெப்ரவரி மாதத்துடன் ஒப்பிடுகையில் மார்ச் மாதத்தில் 9.5 சதவீத அதிகரிப்பைப் பதிவு செய்துள்ளது.

இலங்கை மத்திய வங்கி நேற்று விடுத்துள்ள அறிக்கை ஒன்றில் இந்த விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது.

கடந்த பெப்ரவரி மாதம் உத்தியோகபூர்வ கையிருப்பு 4.52 பில்லியன் அமெரிக்க டொலராக பதிவாகியிருந்தது.

அந்த தொகை கடந்த மார்ச் மாதம் 4.95 பில்லியன் அமெரிக்க டொலராக அதிகரித்துள்ளதாக இலங்கை மத்திய வங்கி குறிப்பிட்டுள்ளது.

அத்துடன், வெளிநாட்டு கடன்கள் மற்றும் வட்டி என்பவற்றுக்காக கடந்த பெப்ரவரி மாதம் வரையில் 1,909.7 மில்லியன் டொலர் செலவிடப்பட்டுள்ளதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

# கல்வி அமைச்சின் இணையத்தளம் முடக்கப்பட்டமை பற்றி விசாரணை




கல்வி அமைச்சின் உத்தியோகபூர்வ இணையத்தளம் முடக்கப்பட்டமை தொடர்பில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

இலங்கை கணினி அவசர தயார்நிலை குழு மற்றும் தொலைத்தொடர்புகள் ஒழுங்குப்படுத்தும் ஆணைக்குழு ஆகியவற்றினால் மேற்படி விசாரணைகள் நடத்தப்படும் என அந்த அமைச்சு விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

கல்வி அமைச்சின் உத்தியோகபூர்வ, இணையத்தளத்திற்கு சைபர் தாக்குதல் நடத்தப்பட்டது.

உயர்தரத்தில் செயற்கை நுண்ணறிவு தொடர்பான பாடத்தை கற்பதாக கூறும் மாணவர் ஒருவரினால் இந்த சைபர் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.



# சுதந்திரக் கட்சியின் அரசியல் குழுவின் அவசரக் கூட்டத்தை கூட்டக் கோரிக்கை

ஶ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் அரசியல் குழுவின் அவசரக் கூட்டத்தை கூட்டுமாறு, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் சிரேஷ்ட உப தலைவர் நிமல் சிறிபால டி சில்வா கோரிக்கை விடுத்துள்ளார்.

அக்கட்சியின் பதில் செயலாளர் துஷ்மந்த மித்ரபாலவுக்கு கடிதம் மூலம் நிமல் சிறிபால டி சில்வ. இக்கோரிக்கையை விடுத்துள்ளார்.

மைத்திரிபால சிறிசேன, கட்சித் தலைவர் பதவியில் நீடிப்பதற்கு நீதிமன்றம் தடை உத்தரவு பிறப்பித்துள்ளதால், கட்சியின் செயற்பாடுகளை முன்னெடுப்பதற்கான ஏற்பாடுகளை அவசரமாக மேற்கொள்ள வேண்டியுள்ளதாக அவர் அந்தக் கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

எதிர்வரும் 8 ஆம் திகதி காலை 10.00 மணிக்கு அவசரக் கூட்டத்தை கூட்டுமாறு நிமல் சிறிபால டி சில்வா அந்த கடிதத்தின் ஊடாகக் கோரிக்கை விடுத்துள்ளார்.

# இன்றைய ராசி பலன்கள் - 06.04.2024




இன்று உங்களுக்கு சாதகமான நாளாக இருக்காது. இன்று உங்களிடம் எதையோ இழந்தது போன்ற உணர்வு இருக்கும் என்பதால் பொறுமை அவசியம் மேற்கொள்ள வேண்டும்.

நீங்கள் பணி செய்யும் விதத்தை திட்டமிட வேண்டும். கவனமாக திட்டமிட்டு பணியாற்ற வேண்டியது இன்று அவசியம்.

மகிழ்ச்சி யின்மை காரணமாக உங்கள் துணையிடம் குறைந்த புரிந்துணர்வு காணப்படும். உங்கள் மன நிலையை மாற்றிக் கொண்டு நீங்கள் மகிழ்ச்சியாக இருக்க வேண்டும்.

நீங்கள் பணத்தை கவனமாகக் கையாள வேண்டும். பண இழப்பை சந்திக்க நேரலாம். இது உங்களுக்கு கவலை ஏற்படுத்தும். நிதி வளர்ச்சி குறைந்து காணப்படும்.




இன்று உங்களுக்கு வாய்ப்புகள் கிடைக்கும் நாள். உங்கள் தன்னம்பிக்கை அதிகரிக்கும். இன்று முக்கிய முடிவுகள் எடுப்பது நல்லது. நீங்கள் நல்ல நேரத்தை கொண்டாடி மகிழலாம்.

இன்று உங்கள் பணிகளை கவனமாக மேற்கொள்ள வேண்டிய சூழல் காணப்படும். உங்கள் மேலதிகாரிகளின் ஆதரவு மற்றும் பாராட்டு பெறுவீர்கள். பணிகளை எளிதாக மேற்கொள்வீர்கள்.

நீங்கள் உங்கள் துணையிடம் அன்பாக நடந்து கொள்வீர்கள். இதனால் உறவில் மகிழ்ச்சியும் நல்லிணக்கமும் காணப்படும்.

நிதி நிலைமையில் முன்னேற்றம் சிறப்பாக இருக்கும். உங்கள் வங்கியிருப்பு உயரும். நிதி நிலையில் சுதந்திரம் காணப்படும்.

இன்று உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.




இன்று உங்கள் கடின உழைப்பிற்கான பலன்களைக் காண்பீர்கள். இன்று முன்னேற்றங்கள் கிடைக்கும். மொத்தத்தில் நல்ல பலன் கிடைக்கும் நாள்.

இன்று நீங்கள் சிறப்பாக பணி புரிவீர்கள். பணியிடத்தில் முன்னேற்றம் காணப்படும். புதிய வேலை வாய்ப்புகள் ஏற்படலாம்.

உங்கள் துணையுடன் நல்லுறவை வளர்த்துக் கொள்வீர்கள். உங்களின் அனுசரணையான போக்கின் மூலம் இது சாத்தியம்.

நிதி நிலையில் சிறப்பான முன்னேற்றம் காணப்படும். கணிசமான தொகை சம்பாதிப்பீர்கள். மகிழ்ச்சி காணப்படும்.

ஆரோக்கியத்தைப் பொறுத்தவரை இன்று சிறப்பாக இருக்கும்.




வெளியிடங்களுக்கு செல்வதன் மூலம் அமைதி காண்பீர்கள். உங்கள் செயல்களில்உணர்வுப்பூர்வமாகசெயல்படுவதை விட யதார்த்தமாக செயல்படுவது நல்லது. எல்லாவற்றிலும் அமைதியான அணுகுமுறை தேவை.

உங்கள் பணிகளை குறித்தநேரத்தில் முடிக்க இயலாது. பணிகளில் தவறுகள் நேராதபடி இன்று நீங்கள் சிறப்பாக பணியாற்ற வேண்டும். உங்கள் பணிகளை முறைபடுத்தி ஆற்ற கற்க வேண்டும்.

உங்கள் துணையிடம் கடுமையாக நடந்து கொள்வீர்கள். நட்பாக நடந்து கொண்டு நல்லுறவை வளர்த்துக் கொள்வது நல்லது.

இன்று அதிக செலவுகள் காணப்படும். தேவையற்ற செலவுகள் செய்ய நேரும். எனவே செலவுகளை கட்டுப்படுத்த வேண்டும்.




ஏழைகள் மற்றும் உடல் ஊனமுற்றோருக்கு பண உதவி செய்ய இந்த நாளை நீங்கள் பயன்படுத்திக் கொள்ளலாம். இதனால் மகிழ்ச்சியாக இருப்பது போல உணர்வீர்கள். முக்கிய முடிவுகள் எடுப்பதை தவிர்ப்பது நல்லது.

இன்று அதிகப் பணிகள் காணப்படும். நீங்கள் பணிகளை திட்டமிட்டு மேற்கொண்டால் நல்ல பலன் கிடைக்கும். சக பணியாளர்களால் சில தொல்லைகளை சந்திக்க நேரலாம்.

உங்கள் துணையுடன் பேசுவதை தவிர்க்கவும். இதனால் சில விரும்பத்தகாத சூழ்நிலையை தவிர்க்கலாம். நம்பிக்கையுடன் இருக்க வேண்டும்.

செலவுகள் அதிகமாக காணப்படும். அதிக பொறுப்புகள் காரணமாக செலவுகள் அதிகமாக இருக்கும்.




உங்கள் முயற்சிகளில் வெற்றி காண்பீர்கள். உங்கள் மனதில் சமநிலை உணர்வு காணப்படும். முக்கிய முடிவுகள் இன்று நல்ல பலன் தரும். உங்கள் தன்னம்பிக்கை நிலை அதிகரிக்கும்.

பணியிடத்தில் உங்கள் திறமைகளை நிரூபிப்பீர்கள். புதிய வேலை வாய்ப்புகள் கிடைக்கும். பணியிடத்தில் உற்சாகமான நிகழ்சிகள் நடக்கும்.

உங்கள் துணையுடன் நட்பாக நடந்து கொள்வீர்கள். இந்தப் போக்கின் காரணமாக இருவரிடையே வலுவான பிணைப்பு ஏற்படும்.

நீங்கள் அதிக பணம் சம்பாதிப்பீர்கள். இந்த வளர்ச்சி உங்களுக்கு மகிழ்ச்சி அளிக்கும்.

உங்களிடம் அதிக உறுதி காணப்படும். இதனால் உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். நீங்கள் மகிழ்ச்சியாக இருப்பீர்கள்.




இன்று நீங்கள் சிறந்த ஆற்றலுடன் காணப்படுவீர்கள். இன்றைய நாளை நீங்கள் பயனுள்ள வகையில் பயன்படுத்திக் கொள்ளலாம். இன்று பல சௌகரியங்களை நீங்கள் உணரலாம்.

நீங்கள் செய்யும் பணியில் வெற்றி காண்பீர்கள். உங்கள் தனித்திறமையை வெளிப்படுத்தி அதற்குரிய அங்கீகாரம் பெறுவீர்கள்.

உங்கள் துணையுடன் நல்ல தொடர்பு கொண்டிருப்பீர்கள். இதனால் அவரிடம் மகிழ்ச்சி காணப்படும். நீங்களும் உங்கள் துணையுடன் மகிழ்ச்சியாக இருப்பீர்கள்.

உங்கள் தேவைகளை சிறிய கடன் மூலம் பூர்த்தி செய்து கொள்வீர்கள். உங்கள் சேமிப்பு உயர்வதைக் காண்பீர்கள்.

உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். ஸ்திரமான ஆரோக்கியம் காணப்படும்.




இன்று மிதமான பலன்களே கிடைக்கும். இன்று நற்பலன்கள்காண நீங்கள் யதார்த்தமான அணுகுமுறை மேற்கொள்ள வேண்டும். சுய முயற்சி நல்ல பலன் தரும்.

உங்கள் பணியில் நீங்கள் கவனமாக இருக்க வேண்டும். பணிகளை கவமாகக் கையாள நீங்கள் பணி சார்ந்த முறையில் திட்டமிட வேண்டும்.

உங்கள் துணையுடன் திருப்தி குறைந்து காணப்படும். உங்கள் இருவரிடையே தவகல் தொடர்பில் பிரச்சினை காணப்படும். இது உங்களுக்கு கவலை அளிக்கும்.

நீங்கள் விரும்பும் பணம் உங்களுக்கு கிடைக்காது. இறுதியில் கடன் வாங்குவீர்கள். இது உங்களுக்கு கவலை அளிக்கும்.

பதற்றம் காரணமாக கால் வலி காணப்படும். அமைதியாக இருப்பது நல்லது.

# இன்றைய ராசி பலன்கள் - 06.04.2024




இன்று முக்கிய முடிவுகள் எதுவும் எடுக்க வேண்டாம். உங்கள் செயல்களில் சிறிது கவனம் தேவை. இன்று நீங்கள் உணர்ச்சி வசப்படலாம். அதனை தவிர்ப்பது நல்லது.

உங்கள் பணிகளை மேற்கொள்ளும்போது ஏமாற்றங்களையும் தடைகளையும் சந்திப்பீர்கள். சக பணியாளர்களுடனான தொடர்பு பயனுள்ளதாக இருக்காது. நீங்கள் பணிகளை முன்னுரிமைப் படுத்தி தக்க நேரத்தில் முடிக்க கற்றுக் கொள்ள வேண்டும்.

உங்கள் துணையிடம் அமைதியற்ற உணர்வு காண்பீர்கள். எனவே எதையும் எளிதாக எடுத்துக் கொண்டு நட்பாக நடந்து கொள்ள வேண்டும்.

பணம் பற்றிய கவலை காணப்படும்.




இன்றைய நாள் சீராகச் செல்லும். மகிழ்ச்சியும் திருப்தியும் காணப்படும். இன்று நல்ல வாய்ப்புகள் கிடைக்கும். இதனை உங்கள் முன்னேற்றத்திற்கு நீங்கள் பயன்படுத்திக் கொள்ளலாம்.

பணியிடத்தில் உங்கள் திறமைகளை நிரூபிப்பீர்கள். உங்கள் பணிக்கு சிறந்த அங்கீகாரம் பெறுவீர்கள்.

நீங்கள் உங்கள் உறவுமுறையில் ஆர்வமுடன் இருப்பீர்கள். இதனால் உங்கள் இருவருக்கும் இடையே திருப்தி காணப்படும்.

உங்களிடம் அதிக பணம் காணப்படும் . உங்களிடம் உற்சாகமான அணுகுமுறை காணப்படும். நல்ல முன்னேற்றம் காண்பீர்கள்.

இன்று மனதில் அமைதியையும் நேர்மறை ஆற்றலையும் உணர்வீர்கள்.




உங்கள் பணிகளை முடிக்க இன்றைய நாளை நீங்கள் பயன்படுத்திக் கொள்ளலாம். இன்று உங்களின் வளர்ச்சி உறுதி. நீங்கள் அமைதியான அணுகுமுறை மேற்கொள்வீர்கள். இதனால் நல்ல முடிவுகளை எடுக்க இயலும்.

நீங்கள் பணிகளை குறித்த நேரத்தில் முடிப்பீர்கள். உங்கள் மேலதிகாரிகளின் அங்கீகாரம் பெறுவீர்கள். தரமான பணிகளை வழங்குவீர்கள்.

உங்கள் துணையிடம் பேசுவதை மகிழ்ச்சியாக உணர்வீர்கள். இருவரும் இணைந்து நேரத்தை சிறப்பாக கழிப்பீர்கள்.

நிதி நிலைமை பாதுகாப்பாக இருக்கும். பணத்தை பொறுத்தவரையில் பயனுள்ள முடிவுகளை எடுப்பீர்கள்.

உங்கள் ஆரோக்கியத்தில் எந்தப் பிரச்சினையும் இருக்காது.




உங்கள் செயல்களை நீங்கள் சுமூகமாக மேற்கொள்ள அனுசரித்து நடந்து கொள்ள வேண்டும். இன்று நீங்கள் நம்பிக்கை இழக்க நேரலாம். எனவே உங்கள் தன்னம்பிக்கையை வளர்த்துக் கொள்ள வேண்டும்.

பணிகள் அதிகமாக காணப்படும். இதனால் பணியில் தவறுகள் செய்ய நேரலாம். சக பணியாளர்களுடன் தொடர்பு கொள்ளும்போது கவனம் தேவை.

உங்கள் இருவரிடையே இருக்கும் கருத்து வேறுபாடு காரணமாக உங்கள் துணையுடன் திருப்தி குறைந்து காணப்படும். உறவில் நல்லிணக்கம் பேண இருவரும் அனுசரித்து நடந்து கொள்ள வேண்டும்.

பணத்தை நிர்வகிப்பதை கடினமாக உணர்வீர்கள். இது உங்களுக்கு கவலை அளிக்கும்.

இன்று நீங்கள் உணர்ச்சி வசப்பட்ட நிலையில் இருப்பீர்கள்.




Discover the Ultimate Investment & Dynamic Destinations which Redefines the Face of Luxurious Living

OUR ONGOING PROJECTS
No.06, 19th Lane, Colombo 03.
No. 15A, Layards Rd, Colombo 04.
No.30, Hotel Road, Mount Lavinia.
No. 02, Glenfall Road, Nuwara Eliya.
No.01, Havelock Place, Colombo 05.
No. 34/2, De Saram Road, Mount Lavinia.
No. 358, High Level Road, Nugegoda.
No. 35, Ramakrishna Road, Colombo 06.



Blue Ocean GROUP OF COMPANIES
KELSEY HOMES 40 Years Housing Excellence
+94777 546 546 | +94 770 774 774
LARGEST PROPERTY DEVELOPER IN SRI LANKA
No. 9A, De Fonseka Place, Colombo 04, Sri Lanka.

Northern PC Park



வடக்கின் கணினிப்பூங்கா
கணினி உலகில் நம்பகமான சேவையில் 15 வருடங்களுக்கு மேலாக யாழ் மண்ணில்
#10 Muddaskadai Junction, Stanley Road, Jaffna.
info@pcpark.co www.pcpark.co
Hot Line :- 077 777 1545
077 757 0124 | 075 555 7327 | 021 567 5566 | 021 222 9581
077 336 6443 | 071 777 2377 | 021 222 2050 | 021 222 0388
Northern Pc Park | Npcpark | northernpcpark | Northern PC Park

# இந்த வருடம் டெங்கு பாதிப்பும் இறப்பு வீதமும் குறைந்துள்ளன

## சுகாதார இராஜாங்க அமைச்சர் விசேட வைத்தியர் சீதா அரம்பேபொல தகவல்



ஏனைய வருடங்களை விட இந்த வருடம் டெங்கு காய்ச்சலினால் பாதிக்கப்படுவோரின் எண்ணிக்கையையும் அதனால் ஏற்படும் இறப்பு வீதமும் குறைந்துள்ளன. இந்த வருடம் ஜனவரி மாதம் வரை 64 டெங்கு அபாய வலயங்கள் காணப்பட்ட போதிலும் இன்று இரண்டு வலயங்கள் வரை அதனைக் கட்டுப்படுத்த முடிந்துள்ளது.”

– இவ்வாறு சுகாதார இராஜாங்க அமைச்சர், விசேட வைத்தியர் சீதா அரம்பேபொல தெரிவித்தார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில் –

”ஆண்டுதோறும் பண்டிகைக் காலங்களில் பாதுகாப்பற்ற முறையில் பட்டாசு வெடிப்பதால் விபத்துகள் ஏற்பட்டு வருகின்றன. எனவே, இந்த புத்தாண்டு காலத்தில் குடும்ப உறுப்பினர்களுடன் இதுபோன்ற செயற்பாடுகளில் கவனமாக இருக்குமாறு கேட்டுக் கொள்கிறோம்.

மேலும், கடந்த காலங்களில் டெங்கு காய்ச்சல் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் பல்வேறு பிரச்சாரங்கள் மேற்கொள்ளப்பட்டன. சுகாதாரத் துறைகள் மற்றும் ஊடக நிறுவனங்களின் பங்களிப்புக்கு நன்றி தெரிவிக்க வேண்டும். உண்மையில், கடந்த ஆண்டுகளுடன் ஒப்பிடுகையில், டெங்கு நோயாளிகளின் எண்ணிக்கையையும், இறப்பு விகிதத்தையும் இந்த வருடம் குறைக்க முடிந்துள்ளது.

ஜனவரி மாதத்தில் 64 டெங்கு அபாய வலயங்கள் இருந்தன. இதுவரை இரண்டு வலயங்கள் வரை கட்டுப்படுத்த முடிந்துள்ளது. ஜனவரி மாதத்திற்குள், ஆயிரத்துக்கும் மேற்பட்ட நோயாளிகள் பதிவாகியுள்ளனர். இது இன்று 200 நோயாளிகளாக குறைந்துள்ளது. காலநிலையும் இதில் தாக்கம் செலுத்தியது என்பதைக் கூற வேண்டும். ஜனவரி முதல் இதுவரை 20,365 டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளனர். அவர்களில் 7,289 பேர் மேல் மாகாணத்தில் இருந்து பதிவாகியுள்ளனர். 2024ஆம் ஆண்டில் 08 டெங்கு மரணங்கள் மாத்திரமே பதிவாகியுள்ளன.

மேலும், எதிர்காலத்தில் ஏற்படக் கூடிய தொற்றுநோய் சூழ்நிலைகளைத் தடுப்பதற்கு தற்போது மிகவும் செயல்திறன்மிக்க வேலைத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது. தொற்றுநோய் சூழ்நிலைகளில் இருந்து விடுபட இது மிகவும் உதவியாக இருக்கும்.” – என்றார்.

# கடலட்டைகளுடன் ஐவர் கடற்படையினரால் கைது

## மன்னார் அச்சங்குளம் பகுதியில் சம்பவம்





**(மன்னார் நிருபர்)**

மன்னார் நானாட்டான் பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள அச்சங்குளம் பகுதியில் மேற்கொள்ளப்பட்ட தேடுதலின் போது சட்ட விரோதமான முறையில் பிடிக்கப்பட்டு பொதி செய்யப்பட்ட கடல் அட்டைகளை இடமாற்றம் செய்த 05 பேரை கடற்படையினர் கைது செய்துள்ளனர்.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் நடைபெற்றுள்ளதாகக் கடற்படை தெரிவிக்கின்றது.

மேலும் 589 கடல் அட்டைகள் 03 மோட்டார் சைக்கிள் மற்றும் டைவிங் கியர்களையும் கடற்படையினர் கைப்பற்றியுள்ளனர்

மீன்பிடி நடைமுறைகளை பொருள்படுத்தாமல் மக்கள் மேற்கொள்ளும் சட்டவிரோத மீன்பிடி நடவடிக்கைகளை ஒடுக்குவதற்காக கடற்படை தீவின் கரையோர மற்றும் கடற்பரப்புகளில் வழக்கமான நடவடிக்கைகளை மேற்கொள்கின்றது.

இந்த முயற்சிகளின் தொடர்ச்சியாக வடமத்திய கடற்படை கட்டளைக்கு உட்பட்ட SLNS புஸ்ஸதேவ கடற்படைப் பிரிவின் அச்சங்குளம் முகாம் கடற்படை வீரர்கள் அச்சங்குளத்தில் மேற்கொள்ளப்பட்ட தேடுதல் நடவடிக்கையின் போது சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சந்தேகத்தின் பேரில் 03 மோட்டார் ஸ்கூட்டர்களை சோதனையிட்டதில் 589 கடல் அட்டைகள் பிளாஸ்டிக் கொள்கலன்களில் அடைத்து கடத்த முயற்சித்தமை தெரிய வந்தது.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் மன்னார் பகுதியைச் சேர்ந்த 23 முதல் 60 வயதுக்கு உட்பட்டவர்கள் என அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

சந்தேகநபர்கள் 05 பேரும் கடல் அட்டைகள் டைவிங் கியர் மற்றும் 03 ஸ்கூட்டர்களுடன் மேலதிக சட்ட நடவடிக்கைகளுக்காக முருங்கன் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர் எனக் கடற்படை தெரிவித்துள்ளது.

# ‘இளம் உலகத் தலைவராக’ ஜீவன் தொண்டமான் தெரிவு

உலகப் பொருளாதார மன்றத்தால் இளம் உலகத் தலைவராக அமைச்சர் ஜீவன் தொண்டமான் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

உலகப் பொருளாதார மன்றம் இதனை அறிவித்துள்ளது.

இலங்கை அமைச்சர் ஒருவர் இளம் உலகத் தலைவராக தெரிவு செய்யப்படுவது இதுவே முதல் முறையாகும்.

இலங்கை வரலாற்றில் முதல் முறையாக இளம் உலகத் தலைவராக தெரிவு செய்யப்பட்ட முதல் அமைச்சர் என்ற பெருமையை ஜீவன் தொண்டமான் பெற்றுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.



# அரச திட்டங்களைச் சாத்தியமாக்கும் பொறுப்பு அரசாங்க அதிகாரிகளையும் கூட சார்ந்துள்ளது

## ஜனாதிபதியின் தொழிற்சங்கப் பணிப்பாளர் நாயகம் சமன் ரத்னப்பிரிய தகவல்

“அஸ்வெசும, உறுமய, மலைநாட்டுத் தசாப்தம் உள்ளிட்ட வேலைத் திட்டங்களின் பலன்களை, மக்களுக்குப் பெற்றுக்கொடுக்க அரசியல்வாதிகளைப் போன்று, அரச அதிகாரிகளும் ஒத்துழைக்க வேண்டியது அவசியமாகும்.”

– இவ்வாறு ஜனாதிபதியின் தொழிற் சங்கப் பணிப்பாளர் நாயகம் சமன் ரத்னப்பிரிய தெரிவித்துள்ளார்.





2024 ஆம் ஆண்டிற்கான வரவு – செலவுத் திட்டத்தில் முன்மொழியப்பட்ட உறுமய, அஸ்வெசும மற்றும் மலைநாட்டுத் தசாப்தம் உள்ளிட்ட திட்டங்கள் குறித்து அரசியல் செயற்பாட்டாளர்கள், தொழிற்சங்கத் தலைவர்கள், சிவில் அமைப்புக்களின் பிரதிநிதிகள் உள்ளிட்ட தரப்பினரைத் தெளிவுபடுத்துவதற்காக ஜனாதிபதி அலுவலகத்தில் அண்மையில் நடைபெற்ற சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்,

ஜனாதிபதி தொழிற்சங்கங்கள் தொடர்பாடல் பிரிவினால் இந்தச் சந்திப்பு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.



எதிர்வரும் நாளர்களில் இந்தச் சந்திப்புகளை நாடளாவிய ரீதியில் நடத்துவதற்கும் திட்டமிடப்பட்டுள்ளதாக ஜனாதிபதி ஊடகப்பிரிவு குறிப்பிட்டுள்ளது.

இதன்போது சமன் ரத்னப்பிரிய மேலும் தெரிவிக்கையில்–

“நிதியமைச்சர் என்ற வகையில், ஜனாதிபதி 2024 ஆம் ஆண்டுக்கான வரவு – செலவுத் திட்டத்தில் பல முக்கிய வேலைத்திட்டங்களை அமுல்படுத்த நிதி ஒதுக்கீடு செய்திருந்தார். அந்த வேலைத்திட்டங்கள் இன்று செயற்படுத்தப்படுகின்றன. அதன்படி உறுமய, அஸ்வெசும , மலைநாட்டுத் தசாப்தம் உள்ளிட்ட மக்களுக்கு பெருமளவில் பலனளிக்கும் திட்டங்கள் குறித்து அனைவரையும் தெளிவுப் படுத்த வேண்டியது அவசியம்.

உறுமய வேலைத் திட்டத்தின் கீழ் மக்களுக்கு காணி உரிமை வழங்கப்படும். 20 லட்சம் மக்கள் அதனால் பயனடைவர். வரலாற்றில் ஒருபோதும் இந்த நாட்டில் இதுபோன்ற திட்டங்கள் முன்னெடுக்கப்படவில்லை.

உறுமயவின் முதற்கட்டமாக 10,000 பேருக்கு காணி உறுதிகள் வழங்கப்பட்டுள்ளமையுடன், ஏனையோருக்கு விரைவில் காணி உறுதிகள் வழங்கப்படும். இதற்கு அரசியல்வாதிகளும் அரசாங்க அதிகாரிகளும் ஒத்துழைக்க வேண்டியது அவசியம்.

உறுமய, அஸ்வெசும மற்றும் மலைநாட்டுத் தசாப்தம் ஆகிய இந்த மூன்று வேலைத்திட்டங்களையும் நடைமுறைப்படுத்த பொதுமக்களின் ஒத்துழைப்பும் அவசியம். அவ்வாறு இல்லாமல் இந்த வேலைத் திட்டங்களை வெற்றிகரமாகச் செயற்படுத்த முடியாது. மேலும், அது குறித்து மக்களை தெளிவுபடுத்தி ஜனாதிபதியின் எண்ணக்கருவுக்கு அமைய இந்தத் திட்டங்களை செயற்படுத்த அரசியல் செயற்பாட்டாளர்களின் ஒத்துழைப்பு மிக அவசியமானது.

மேலும் சமூர்த்தி திட்டத்தின் கீழ் குறைந்தபட்சம் 8000 ரூபா வரையில் பெற்றவர்கள் அஸ்வெசும திட்டத்தில் குறைந்த பட்ச நிவாரணமாக 15000 ரூபா வரை பெறுகின்றனர். பொருளாதார நெருக்கடியால், மக்கள் மத்தியில் வறுமை அதிகரித்தது. 05 லட்சம் பேர் தொழிலை இழந்தனர். மக்களின் தேவைகளை நிறைவேற்ற வேண்டியது மக்களின் பொறுப்பாகும்.

ஆனால் அவற்றை தொடர்ச்சியாக வழங்கும் எண்ணம் ஜனாதிபதிக்கு இல்லை. இந்த வேலைத்திட்டங்களின் ஊடாக பொருளாதார ரீதியில் மக்களை வலுவூட்டுவதே அவரது நோக்கமாக உள்ளது. அதனால் இந்த வேலைத் திட்டத்தை வெற்றிகரமானதாக மாற்ற நாம் இடைத் தரகர்களாகச் செயற்பட வேண்டும்.

அதன்படி மலைநாட்டு தசாப்தம் வேலைத்திட்டத்தை 10 மாவட்டங்களின் 89 பிரதேச செயலகப் பிரிவுகளில் தொடர்ச்சியாக 10 வருடங்கள் செயற்படுத்தப்படவுள்ளது. இத்திட்டம் இவ்வருடத்தில் ஆரம்பிக்கப்பட்டுள்ள நிலையில், சுகாதாரம், குடிதண்ணீர், சுகாதார பாதுகாப்பு, வீதி உள்ளிட்ட 10 விடயங்களுக்கு முன்னுரிமை அளித்துச் செயற்படுத்தப்படவுள்ளது.

இந்த வேலைத்திட்டங்களை சாத்தியப்படுத்த வேண்டிய பொறுப்பு எம்மை சார்ந்திருக்கிறது. தனிப்பட்ட அரசியல் நோக்கங்களை விடுத்து ஜனாதிபதியின் எண்ணக்கருவிற்கு அமைவான இந்த வேலைத்திட்டங்களை வலுவாகச் செயற்படுத்தி மக்களுக்கு அதன் பிரதிபலன்களை வழங்க வேண்டும்.”

– என்றார்.